
50

# திருவெண்காட்டுத் தலவரலாறு



பெரியநாயகியம்மன் கோயில்

ஆக்கியோன்

கலியாணம், M. A.

யகவரசுவாமி தேவஸ்தான வெளியீடு

திருவெண்காடு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 21 DEC 1961
MADRAS RECORD OFFICE MADRAS
Q23:38.21193 TV
N42.5
109918

550
4-61

உ
சிவமயம்

# திருவெண்காட்டுத் தலவரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 1961
MADRAS

ஆக்கியோன்
G. கலியாணம், M.A.,
ஆசிரியர், 'திருக்கோயில்', அறநிலையத்துறை, சென்னை.

வெளியிட்டோர்

K. கனகசபை பிள்ளை,
தலைவர், அறங்காவலர் குழு.

K. சின்னசாமி துரை, அறங்காவலர்.

S. சுப்பிரமணிய பிள்ளை, அறங்காவலர்.

A. A. வெங்கடாசலம், B.A., இறைபணியாளர்.

ஸ்ரீ சுவேதாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருவெண்காடு
1961

முதற்பதிப்பு 1942
இரண்டாம் பதிப்பு 1945
மூன்றும் பதிப்பு 1947
நான்காம் பதிப்பு 1955
ஐந்தாம் பதிப்பு 1961—(Revised & enlarged)

023:38.21193 FV

X142-5

109918

பாரி அச்சகம், சென்னை-1

# அணிந்துரை

[திரு. அ. உத்தண்டராமன் அவர்கள் I. A. S.
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை]

கண்காட்டு நுதலானும் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே

—திருஞானசம்பந்தர்.

மிகச் சிறந்த பாடல் பெற்ற பதிகளில் ஒன்று திருவெண்காடு. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகைப் பெருமைகளையுமுடையது. சுவேதாரண்யேசுவரர், நடராஜர், அகோரசிவர் என்ற மூன்று மூர்த்திகள், சோம, சூரிய, அக்கினி என்ற மூன்று தீர்த்தங்கள், வடவால், கொன்றை, வில்வம் என்ற மூன்று தல விருட்சங்கள் முதலிய தனிச் சிறப்புடைய தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவரும் இத்தலத்திறைவன் பேரில் தேவாரப் பதிகங்கள் ஓதியருளியுள்ளனர். பெண்ணாகடத்து அச்சுதகளப்பாளர் தமக்குப் பிள்ளைப் பேறில்லாத குறை நீங்கும்பொருட்டு தமது குல குருவான திருத்துறையூர் - அருணந்திசிவாசாரியரிடம் விண்ணப்பிக்க அவர் தேவாரத்தில் கயிறு சாத்திப்பார்த்து ஆணையிட்டவண்ணம், தாமும் தம் மனைவியும் திருவெண்காடு சென்று சிலகாலம் தங்கி, முக்குள நீராடி இறைவனை வழிபட்டு ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்து சுவேதவனப் பெருமான் என்று திருநாமம் இட்டனர்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே

என்ற சம்பந்தர் பாடலை மெய்ப்பித்தது இந்த நிகழ்ச்சி. அந்த இளங் குழந்தையே சைவ சித்தாந்தத்தலைமணி நூலான **சிவஞானபோதத்தை** உலகுக்களித்த **மெய்கண்ட தேவராவர்.** இன்னும் இத்திருவெண்காட்டுத் தலம் பட்டினத்தடிகளின் வரலாற்றுச் சம்பந்தம் உடையது. அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரான திருச்செங்காட்டங்குடி சிறுத்தொண்டரின் மனைவியரான திருவெண்காட்டு நங்கையும் அவர் பணிப்பெண்ணான சந்தன நங்கையும், இப் பதியைச் சார்ந்தவர்களே. இத்தகைய பழம் பெருமைவாய்ந்த பதிக்கு வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் என்பவரால் தல வரலாறு எழுதப்பெற்று தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பெற்றது. இதுவரை நான்கு பதிப்புக்கள் ஆகி நூல் பிரதிகள் எல்லாம் செலவாகிவிட்டன. இப்போது இந்த ஐந்தாம் பதிப்பு ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் விரிவான முறையில் வெளியிடப்பெறுகிறது. இதனை எழுதியவர் சென்னை அறநிலையத்துறை வெளியீடான "திருக்கோயில்" என்னும் இதழின் ஆசிரியர், திரு. G. **கலியாணம் பிள்ளை** அவர்கள் M. A. ஆவர். இந்த நூலை, திருவெண்காடு சுவேதாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானத்தார் கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடக்கும் இந்த நன்னாளில் *(26-3-1961)* வெளியிடுவது சாலப்பொருத்தமுடையது. இந்த நூலை எழுதியவர்க்கும், வெளியிட்ட தேவஸ்தானத்தாருக்கும் சைவவுலகும் தமிழ் உலகும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணில் நின்றமணி ஒக்கும்
பெண்காட் டிப்பிறைச் சென்னிவைத் தான்திரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே


—திருநாவுக்கரசர்.

# கோயில் தரைப்பட விளக்கம்

1. சுவேதாரண்யர்
2. பெரியவாரணப் பிள்ளையார்
3. சோமாஸ்கந்தர்
4. அறுபத்துமூவர்
5. பத்திரகாளி
6. திருமால்
7. அகோரர்—மூலவர்
8. அகோரர்—உற்சவர்
9. நடராஜ சபை
10. சண்டேசுவரர்
11. சுவேதலிங்கம்
12. துர்க்கை
13. நவக்கிரகம்
14. மடைப்பள்ளி
15. திருக்கல்யாண மண்டபம்
16. நந்தி, பலிபீடம்
17. மெய்கண்டார் கோயில்
18. ஊஞ்சல் மண்டபம்
19. அக்கினீசர்
20. அக்கினி தீர்த்தம்
21. மெய்கண்டார் நந்தவனம்
22. சூரியேசர்
23. சூரிய தீர்த்தம்
24. தேவஸ்தான அலுவலகம்
25. நந்தவனம்
26. களஞ்சியம்
27. ஆறுமுகப்பெருமான்
28. நூற்றுக்கால் மண்டபம்
29. பெரியநாயகியம்மன்
30. பிள்ளையிடுக்கியம்மன்
31. புதன்
32. பிரமசமாதி
33. வில்வமரம்
34. திருவெண்காட்டுநங்கை நந்தவனம்
35. சந்திரதீர்த்தம்
36. கொன்றைமரம்
37. வடவாலமரம்
38. சோமேசர்
39. மின்பொறி நிலையம்
40. உற்சவ மண்டபம்
41. கிணறு தீர்த்தம்
42. யாகசாலை

# திருவெண்காட்டுத் திருக்கோயில் அமைப்பு

வடக்கு



உ

சிவமயம்.

# திருவெண்காட்டுத் தலவரலாறு

ஓகையினற் சுவேதவனச் சிறப்பதனை
வினவினர்க்கு முரைத்தபேர்க்கும்
சோகமறும் பிணியகலும் பகையழியும்
வறுமையெனுந் துயரம்தீரும்
யாகமெலா முடித்தபலன் தானமெலாம்
கொடுத்தபல மெல்லாஞ்சேரும்
போகமுண்டா முத்தியுண்டா மெப்போது
மழியாத புகழுண்டாமே.

## 1. தல இருப்பிடம்

உலகத்திலுள்ள உயிர்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டு இறைவன் திருமேனி தாங்கித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பலவுள்ளன. அவற்றுள் தேவாரப் பாடல் பெற்றவை மிகச்சிறந்தவை. அவைகளைப் 'பாடல் பெற்ற பதிகள்' என வழங்குவர். சோழநாடு, ஈழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு, துளுவநாடு, வடநாடு என நாட்டு வகையாக அத்தலங்களைப் பிரித்திருக்கின்றனர் ஆன்றோர். அதிலும் சோழநாட்டை இரு பகுதிகளாக வகுத்துள்ளனர். அவை காவிரியாற்றுக்கு வடகரையிலும், தென்கரையிலும் திகழும் தலங்களாகும். காவிரிக்கு வடபால் விளங்கும் பதிகளில் பதினொராவதாகப் பண்டையோரால் வைத்து எண்ணப்படுவது திருவெண்காடு என்பது. இத்திருத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில், சீகாழிப் பகுதியிலிருக்கிறது. சென்னை—மாயூரம்

இருப்புப்பாதையில் சீகாழி இருப்பாதை நிலயத்தி லிருந்து தென்கிழக்கே 9 கல் தொலைவிலுள்ளது. சீகாழியிலிருந்து திருவெண்காட்டிற்கு நேரே பஸ்கள் செல்கின்றன. திருவெண்காட்டில் மேற்கு மடவளா கத்திலுள்ள திருப்பணி செட்டியார் கட்டிடங்கள், தேவஸ்தான விடுதி, தெற்கு வீதியிலிருக்கும் சத்திரம், குருபூசை மடம் இவைகளில் யாத்திரை செல்வோர் தங்கலாம். திருவெண்காட்டிற்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் காவிரியாறும், வடக்கே ஒரு கல் தூரத் தில் மணிகர்ணிகை யென்னும் மண்ணியாறும் ஓடு கின்றன. திருச்சாய்க்காடு [சாயாவனம்), காவிரிப் பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம், திருவலம்புரம், கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருக்கலிக்காமூர் முதலிய தலங்கள் திருவெண்காட்டைச் சூழ்ந்துள்ளன. திரு நாங்கூர், திருவாலி திருநகரி என்ற வைணவப்பதிகளும் இதன் அருகே இருக்கின்றன.

## 2. தலப்பெயர்கள்

தேவார முதலிய திருமுறைகளிலும், தலபுராணத் திலும், மற்ற இலக்கிய நூல்களிலும், கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலும் இத்தலத்திற்குப் பல பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. வடமொழியில் **சுவேதாரண்யம்** என்று வழங்குகிறது. (சுவேதம்=வெண்மை. ஆரண் யம்=காடு). வேதவெண்காடு, சுவேதவனம், காலாஞ் சரம், வில்வவனம், மகாவரங்கம். முத்திவாயில், முத்தி நகர், தமோநாசபுரம், முருகன்பூண்டி, பாதாளகயி லாயம், ஞானவனம், சிவானந்தக்காடு, கணபதிநகரம், **ஆதிசிதம்பரம்,** திருவூர், உமையூர், மாலூர், தலநாயகம், பெரியமயானம், பேரரங்கம், நவநிருத்தகணம், அவி முத்தம், தருமகோடி, சித்திநகர் முதலிய பலபெயர்கள் இப்பதிக்குண்டு. திருமுறைகள், கல்வெட்டுக்கள் முதலியவற்றில் **திருவெண்காடு** என்ற பெயரே குறிக்கப் படுகிறது.

முத்திநகர் தமோநாசபுரம் பாபநாசபுர முருகன்பூண்டி
சித்திநகர் பாதாளகயிலாய ஞானவனஞ் சிவானந்தக்கா
டொத்தகண பதிநகரமாதி சிதம்பரந்திரு வூமையூர்மாலூர்
மெய்த்தலநா யகம்பெரியமயான மெனும்பேருடனும் விளங்கிற்
[றன்றே

என்பது தலபுராணப் பாடல். வேதங்கள் பூசித்த தால் **வேதவெண்காடு**; சுவேதன் என்ற மன்னவன் வழி பட்டமையின் **சுவேதவனம்**; இயமன் வலியழிந்தமையால் **காலாஞ்சரம்**; வில்வம் தலவிருட்சமாதலின் **வில்வவனம்**; சங்காரநடனத்தின் பின் உலகமுய்ய எடுத்த ஞான தாண்டவம் மறு சங்கார காலம்வரை செய்கிறபடியால் **நவதிருத்தகணம், பேரரங்கம், மகாவரங்கம், ஞானவனம்**; தமோகுணத்தையும் பாவத்தையும் அழித்தலின் **தமோ நாசபுரம், பாபநாசபுரம்**; முருகன், கணபதி இவர்கள் வழி பட்டதால் **முருகன்பூண்டி, கணபதிநகரம்**; திருமகள், உமா தேவி, திருமால் இவர்கள் பூசனைபுரிந்ததால் **திருவூர், உமையூர், மாலூர்**; தலங்களுக்குள்ளே நாயகமாய் விளங் கும் பெற்றியால் **தலநாயகம்**; பிரமனுக்கு இவ்விடம் மயானமானதால் **பெரியமயானம்**; இத்தலத்தில் செய்யும் ஒரு திருமம் கோடியாகும் தன்மையால் **தருமகோடி**; எல்லா நன்மைகளையும் பயத்தலின் **சித்திநகர்**; தில்லைச் சிதம்பரத்திற்கு முன்பே இப்பதியில் ஆண்டவன் தாண்டவம்புரிந்தருளினபடியால் **ஆதிசிதம்பரம்**; என இவ்வாறெல்லாம் பெயர்களுக்கு விளக்கங்கள் கூறப் பட்டிருக்கின்றன. திருவெண்காட்டுத் தலபுரா ணத்தில்,

தெரிசனஞ் செயத்தில்லையிற் கமலையிற் செனிக்க
மரண மாய்விடக் கங்கைசூழ் வாரணசியிலே
அருணை மாநகர் நினைத்திட முத்தியஞ்செழுத்தும்
பிரணவத்தொ டெம்பேர்களு முரைக்கிலும் பெறலாம்

என்று வரும்பாடலில் திருவாரூர்ப் பிறக்கமுத்தி, தில்லையில் தெரிசிக்கமுத்தி, திருவண்ணமலை நினைக்கு முத்தி, காசியில் இறக்கமுத்தி என்று குறிக்கப்பட்

டிருக்கிறது. இவ்வனைத்தும் ஒருங்கே ஓரிடத்தே வாய்க்கக்கூடியது திருவெண்காடு ஆதலின் **முத்தி வாயில், முத்திநகர்** என்ற பெயர்கள் ஏற்பட்டன. "இந் நகரின் பெயரில் ஒன்றை நினைத்தாலும் வினையகலும் இடுக்கண் நீங்கும்" என்றும், "இத்தலத்தின் பேரி லொன்றை யுரைத்தவர்க்கு யாகபலமெல்லாம் எய் தும், சத்தியம் சத்தியம்" என்றும் கூறப்பட்டிருக் கிறது.

## 3. கோயில் அமைப்பு

நம்முடைய நாட்டில் கோயில்களைச் சுற்றியே பெரும்பாலும் நகரங்களும், ஊர்களும் உண்டாயின. பழந்தமிழ் இலக்கியங்களில் **நகர்** என்ற சொல்லால் கோயில்கள் குறிக்கப்பட்டிருப்பதே இதற்குப் போதிய சான்றாகும். கோயில்கள் ஆகம சிற்பநூல் முறைப்படி கட்டப்பட்டிருக்கின்றன. திருவெண்காட்டி லுள்ள சிவபெருமான் கோயில் ஊருக்கு நடுநாயகமாய் விளங்குகின்றது. கோயிலைச்சுற்றி நான்கு தேரோடும் திருவீதிகளும், மடவளாகமும் அமைந்துள்ளன. பெரும்பாலான கோயில்களைப்போலவே திருவெண் காட்டுக் கோயிலும் கிழக்கு நோக்கியிருக்கிறது. கோயில் கிழக்கு மேற்கில் 792 அடி நீளமும், தெற்கு வடக்கில் 310 அடி அகலமும் கொண்டதாக இருக் கிறது. கோயிலுக்கு கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு வாயில்கள் உள்ளன. சிறந்த சிற்பங்கள் நிறைந்த இராஜகோபுரங்கள் இந்த இரு வாயில்களையும் அழகு செய்கின்றன. வெளிப் பிரகாரத்திலிருந்து உட்பிர காரம் செல்ல கிழக்கு மேற்கு இரு பக்கங்களிலும் உள்ள வாயில்களையும் இரண்டு கூடகோபுரங்கள் அணி செய்கின்றன. கோயிலுக்கு வெளியில் கிழக்குக் கோபுர வாயிலுக்குத் தென்புறம் சந்நிதித் தெருவில் **இந்திர விநாயகர் கோயில்** இருக்கிறது.

கீழ்க்கோபுரவாயில் வழியே உள்ளே நுழைந் ததும் **நந்தி, பலிபீடம்** இவைகளைக் காணலாம். இவை

களுக்குத்தெற்கே **ஊஞ்சல்மண்டபம், அக்கினீசுவரர்கோயில்,** புதிதாகக் கட்டப்பெற்ற **மெய்கண்டார் கோயில்** இவை உள்ளன. அவற்றிற்கு மேல்புறம் **அக்கினி தீர்த்தம்** இருக்கிறது. அதையொட்டி **மெய்கண்டார் நந்தவனம்** அமைந்துளது. இவற்றைக் கடந்து சற்று மேற்கே தெற்கு வெளிப்பிரகாரத்தில் சென்ருல் **சூரியேசர் கோயிலேயும், சூரிய தீர்த்தத்தையும்** காணலாம். வெளிப் பிரகாரத்தின் தென்மேற்கு மூலேயில் தேவஸ்தான அலுவலகம், தேவாரப் பயிற்சிப் பள்ளிமாணவர் உணவுச்சாலே, களஞ்சியம், நந்தவனம் முதலியவை இருக்கின்றன. மேற்கு இராஜகோபுரவாயிலுக்கு உட் புறம் வடபால் **அறுமுகப்பெருமான் கோயிலும், நூற்றுக்கால் மண்டபமும்** அமைந்துள்ளன. நூற்றுக்கால் மண்டபம் சமயச் சொற்பொழிவுகள், இன்னிசை யரங்குகள், சிவாகமச் சித்தாந்தப்பயிற்சி வகுப்புக்கள் முதலியவை நடைபெறப் பயன்படுகின்றது. வெளிப்பிரகாரத்தின் வடமேற்கு மூலேயில் **அம்மன் கோயில்** கிழக்கு நோக்கி யிருக்கிறது. அதற்குத் தனி உட்பிரகாரமும் உண்டு. அம்பிகை சந்நிதிக்கு இடதுபுறம் **புதன் கோயிலும், பிரம சமாதியும், வில்வமரமும், திருவெண்காட்டுநங்நை நந்தவனமும்** இருக்கின்றன. எதிரில் **சந்திரதீர்த்தம்** உள்ளது. அதன் தென்கரையில் **கொன்றை மரமும்,** கீழ்பால் **வடவாலமரமும், சந்திரேசுவரர் கோயிலும்** காணப்படும். வடகிழக்கு மூலே யில் யாகசாலே இருக்கிறது. கிழக்கு வெளிப்பிரகாரத்தி லிருந்து உட்பிரகாரம் செல்வதற்குமுன் **உற்சவ மண்ட பத்தையும்,** பெருஞ்செலவில் அண்மையில் அமைக்கப் பெற்ற **திருக்கல்யாண மண்டபத்தையும்** பார்க்கிருேம்.

உட்பிரகாரத்தின் தெற்கு திருமாளிகைப் பத்தி யில் **அறுபத்துமூவர், பத்திரகாளி,** வீரபத்திரர், இடும்பன், சுகாசனமூர்த்தி, சோலேயப்ப முதலியார், மந்திரி இவர் களின் திருவுருவங்கள் உள்ளன. மேற்கு உட்பிரகா ரத்தில் நாகேசுவரர், விநாயகர், யோகமாணிக்கவாசகர், மாணிக்கவாசகர், சுந்தரர், அப்பர், சம்பந்தர், ஆவுடை யார் பத்ரபீடம், விசுவேசுவரர், விசாலாட்சி, அங்காள

பரமேசுவரி, **சுவேதவனப்பெருமாள்** (விஷ்ணு), பஞ்ச லிங்கம், பாலசுப்பிரமணியர், அஷ்டலட்சுமி, இலட்சுமி, சரசுவதி, தனவிநாயகர் முதலியவர்களின் சந்நிதிகள் உள்ளன. அந்தப் பிரகாரத்திலேயே கர்ப்பக்கிரகத்திற்கு வடமேற்காக **நடராஜசபை** அமைந்திருக்கிறது. கர்ப்பக் கிரகத்திற்குத் தெற்கே பெரியவாரணப்பிள்ளையார், சோமாஸ்கந்தர் சந்நிதிகள் இருக்கின்றன. வடக்கு உட்பிரகாரத்தில் **அகோரமூர்த்தி** (மூலவர்), காட்சிநாயனார், அகோரமூர்த்தி (உற்சவர்), **சுவேதலிங்கம், சண்டேசுவரர்** இவர்கள் சந்நிதிகள் உள்ளன. கிழக்கு உட்பிரகாரத்தில் பைரவர், காசித்துண்டி விநாயகர், துர்க்கை, நவக்கிரகங்கள் இவர்களுடைய திருவுருவங்கள் உள்ளன. நடுவில் **சுவேதாரண்யேசுவரர்** திருச்சந்நிதி அமைந்திருக்கிறது. கர்ப்பக்கிரகச் சுவர்களில் சட்டைநாதர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் முதலியவர்களின் திருவுருவங்களும் இருக்கின்றன. இக்கோயில் அமைப்பின் விவரங்களை இந்நூலிலுள்ள தரைப்படத்தில் காண்க.

## 4. மூர்த்திகள்

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

—தாயுமானவர்.

கோயில்களில் திருமேனிகொண் டெழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் மகிமையே மக்கட்கு பக்தியை விளைவிப்பன. திருவெண்காட்டுக் கோயிலில் மிகவும் முக்கியமாகப் போற்றப்படும் மூர்த்திகள் மூன்று. அவை **சுவேதாரண்யேசுவரர், நடராஜர், அகோரமூர்த்தி** என்பன.

**சுவேதாரண்யேசுவரரை** வழிபட்டுப் பேறுபெற்றோர் விண்ணுளும் தேவர்களும், மண்ணுளும் மன்னர்களும் மற்றையோரும் பலராதலின் அவர் பெருமை அள

விடற்கரிது. உலகீன்ற அன்னையாகிய அம்பிகையை **பிரமவித்தியாம்பாள், பெரியநாயகி** என்ற திருப்பெயர்களால் அழைப்பர்.

**நடராஜர்**: தில்லைச் சிதம்பரம் போன்றே இங்கு நடராஜசபை அமைந்திருப்பது தனிப்பெருஞ் சிறப்புடையது. ஸ்படிகலிங்கமூர்த்தி, இரகசியம் முதலியவையெல்லாம் அங்கிருப்பதுபோன்றே இங்கும் உள்ளன. ஆறு அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. அப்போது பஞ்சகிருத்திய தீபாராதனை நடைபெறுகிறது. ஆகவே, இத்தலத்தை 'ஆதிசிதம்பரம்' என்று போற்றிப் புகழ்வாராயினர். இந்த நடராஜர் திருவுருவ அமைப்பில் பல தத்துவங்களை அறிந்துகொள்ளலாம். 14 சதங்கைகளுடைய காப்பு ஒன்று அவர் காலில் காணப்படுகிறது. ஈரேழு புவனங்களும் அவருடைய அசைவினால் தான் அசையும் என்பதை அது குறிக்கும். இடுப்பில் 81 சங்கிலி வளையங்கள் அமைந்த அரைஞாண் திகழ்கின்றது. அது **பிரணவம்** முதல் **நம:** இறுதியாகவுள்ள 81 பதமந்திரங்களை உணர்த்தும். 28 எலும்புமணிகள் கோத்து முன்னால் ஒரு பன்றிக் கொம்பும், பின்புறம் ஒரு ஆமை ஓட்டுப் பதக்கமும் உள்ள அணியொன்றைத் தரித்திருக்கிறார். வேறு ஆபரணம் ஒன்றுமில்லை. "என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பிலங்க" என்ற சம்பந்தர் கோளறு பதிகப்பகுதியை இது நினைவூட்டி நிற்கின்றது. 28 சதுர்யுகங்கள் முடிந்திருக்கிறதென்பதை 28 எலும்பு மணிகள் குறிக்கின்றன என்றும் கூறுவர். தலையில் மயில்பீலி (பிஞ்ஞகம்) இருக்கிறது. கங்கை மீன் போன்ற வடிவத்தில் காணப்படுகிறாள். "பல பல வேடமாக" என்று தொடங்கும் பாடலில் "சல மகளோடு எருக்கு முடிமேல் அணிந்த" என்று வரும் பகுதியை நினைவுபடுத்துகிறது. இளம்பிறைச் சந்திரனையும் முடிமேல் அணிந்திருக்கிறார். சோடச கலைகளை உணர்த்தும் 16 சடைகள் உள்ளன; 15 சடைகள் தொங்குகின்றன; ஒன்று கட்டியுள்ளது. நுதல் விழி

அழகாகத் தெரிகிறது. இத்தலத்துச் சம்பந்தர் தேவாரப் பதிகத்தின் முதல் பாட்டு முதலடியில் தொடங்கும் "கண்காட்டும் நுதலானும்" என்ற பகுதியை இவர் உருவத்தில் தத்ரூபமாகக் காணலாம். "கண்காட்டிக் கண்ணில் நின்ற மணிஒக்கும்" என்று இத்தல அப்பர் தேவாரப் பதிகத்தின் முதல் பாடலில் அமைந்திருப்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது. இவர் தோளில் ஒருசிறு துண்டு துவள்கிறது. இடையில் புலித்தோல் உடை காணப்படுகின்றது. இவர் காலின் கீழ் அகப்பட்டிருக்கும் முயலகன் வயிறு மிதியினுல் பிதுங்கி இயற்கையாகத் தோன்றுகிறது.

**அகோரமூர்த்தி :** இவரை **அகோரசிவன்** என்றும் கூறுவர். இம்மூர்த்தியும் இத்தலத்தில் தனிப்பெருமையுடன் விளங்குபவர். இவரை **அகோர வீரபத்திரர்** எனச் சிலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். இது தவறு. அகோர வீரபத்திரர் தட்சயாகத்தை அழிக்க சிவபெருமாஞல் நெற்றிக்கண்ணினின்றும் தோற்றுவிக்கப் பெற்றவர். ஆதலின் அவர் வேறு. இத்தலத்தெழுந்தருளியுள்ள **அகோரமூர்த்தி,** மருத்துவாசுரன் என்பவனின் வலி தொலைக்கத் தோன்றியவர். பஞ்சப்பிரம மூர்த்தங்களுள் தென்முகமாயுள்ள அகோரமூர்த்தியாவர். இவர் திருவுருவத்தில் 14 நாகங்கள் ஆபரணமாக விளங்குகின்றன. இவருடைய வலதுகால் கட்டைவிரல், இரண்டாவது விரல் ஊன்றி மற்ற பாதம் தூக்கியிருக்கிறது. அப்பர் சுவாமிகள் இத்தலத்தைப் பற்றிப் பாடிய "தூண்டுசுடர் மேனி" எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தில் சொல்லப்பட்டவை அனைத்தும் அகோரமூர்த்தியின் திருவுருவத்தில் காணலாம். இருபத்தெட்டு ஆகமங்களில் உத்தர காரண ஆகமத்தில் இவரை அகோராஸ்திர மூர்த்தியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மருத்துவாசுரன் சரணுகதியடைந்தான். இவர் திருவடியில் மல்லாந்து கிடக்கின்ருன். இவர் எண்தோள் முக்கண் ஈசராகக் காட்சியளிக்கிருர். மூவிலைச் சூலமேந்திய கையுடன் கம்பீரமாக நிற்கும்

இவர் கவின்பெறு வனப்பைக் கண்டவர் கண்படைத்த பயனைப் பெற்றவராவர்.

**சுவேதவனப்பெருமாள்:** தில்லைச் சிதம்பரத்தி லிருப்பதுபோலவே இங்கும் நடராஜர் சந்நிதிக்குமுன் பெருமாள் சந்நிதி யிருந்ததாகத் தெரிகிறது. இப்போது அந்த இடத்தில் சோமாஸ்கந்தர் எழுந்தருளி யிருக்கிறார். திருமாலின் திருவுருவம் இப்போது சோமாஸ்கந்தருக்குப் பின்புறம் மேற்கு திருமாளிகைப் பத்தியிலிருக்கிறது. நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் சேவை சாதிக்கிறார்.

**புதன்:** அம்மன் சந்நிதியில் புதனுடைய தனிக் கோயில் இருக்கிறது. இந்த கோயிலில் நவக்கிரகங்கள் வக்கிரமாக இல்லாமல் வரிசையாக அமைந்துள்ளன.


தலவிநாயகர் — பெரியவாரணப்பிள்ளையார், சட்டைநாதர் (சுதை), மெய்கண்டார், பொல்லாப் பிள்ளையார், பிள்ளை இடுக்கி அம்மன், பத்திரகாளி, துர்க்கை, ஆறுமுகர், அறுபத்துமூன்று நாயன்மார், தட்சிணாமூர்த்தி, துண்டி விநாயகர், காசிவிசுவேசுவரர், விசாலாட்சி, அங்காளபரமேசுவரி, இலட்சுமி, கலைமகள் முதலிய திருவுருவங்களும், சந்திரேசுவரர், சூரியேசர், அக்கினீசர், ஐராவதீசர், சுவேதகேதீசர், வருணேசர், கணபதீசர், வியாதேசர், சிவப்பிரியேசர், சுவேதேசர் முதலிய சிவலிங்கமூர்த்திகளும் இக்கோயிலில் உள்ளன. அகோரமூர்த்தி உற்சவரும், பிட்சாடனமூர்த்தி உற்சவரும் மிகவும் அழகான திருவுருவங்கள்; அவசியம் பார்க்கவேண்டியவை. அண்மையில் திருப் பணிக்காகப் பூமியைத் தோண்டும்போது வடக்கு உட் பிரகாரத்தில் நடராஜர், சிவகாமி, சோமாஸ்கந்தர், தனிஅம்பிகை, புதன், அர்த்தநாரீசுவரர் முதலிய செப்புத் திருமேனிகள் அகப்பட்டன. அவைகளும் மிக்க வனப்புவாய்ந்த திருவுருவங்களாகக் காணப் படுகின்றன.

## 5. தீர்த்தங்கள்

கோயில்களுக்கு இன்றியமையாதவை அவை களைச் சார்ந்த தீர்த்தங்கள். கோயிலுக்கு வழிபட வருவோர் முதலில் அவைகளில் நீராடி, சமயச் சின்னங்கள் அணிந்து தூய்மையுடன் செல்லப் பயன் படுகின்றன. பொதுவாகத் தீர்த்தங்களை ஆறு, கடல், குளம், கிணறு என்ற நான்கு வகைகளாகப் பிரிக்க லாம். இவைகள் கோயிலுக்கு உள்ளேயோ, அல்லது வெளியேயோ, அல்லது இவ்விரண்டிடங்களிலுமேயோ இருக்கும். திருவெண்காட்டுக் கோயிலில் மிகவும் பெருமையும் மகிமையும் வாய்ந்த மூன்று தீர்த்தங்கள் திருக்குளங்களாக அமைந்திருக்கின்றன. சிவபெருமான் உமாதேவியாரது வேண்டுகோளுக்கிசைந்து இத்திரு வெண்காட்டிலே நிருத்தம் செய்தார் என்றும், அப்போது அவருடைய முக்கண்களினின்றும் ஆனந் தத்தினுல் மூன்று துளிகள் சிந்தின என்றும், அந்த மூன்று துளிகளும் அக்கினிதீர்த்தம், சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம் என்ற மூன்று குளங்களாய் அமைந்தன என்றும், பின்னர் அகோரசிவனுர் ஆயுதபாணியாய் நின்று விழித்து நோக்கும்போது அவருடைய முக்கண் களினின்றும் சிந்திய மூன்று நீர்த்துளிகளும் முன்னைய முத்தீர்த்தத்தில் தனித்தனி சென்று கலந்தன என்றும் தலபுராணம் கூறுகிறது.

**அக்கினிதீர்த்தம்** வெளிப்பிரகாரத்தில் தென்கிழக்கு (அக்கினி) மூலையில் இருக்கிறது. இதன் கரையில் அக்கினீசர், மெய்கண்டார் கோயில்கள் இருக்கின்றன.

**சூரியதீர்த்தம் :** தெற்கு வெளிப்பிரகாரத்தில் அக்கினிதீர்த்தத்தின் மேல்பால் அமைந்திருக்கிறது. இதன் கீழ்க்கரையில் சூரியேசர் கோயில்கொண் டெழுந்தருளியுள்ளார். தீர்த்தப்படித்துறைக்குச் செல் லும் வாயிலின்மேல் சுதையினுலான சூரியபகவானின் உருவம் காட்சியளிக்கிறது.



கிழக்கு இராஜகோபுரமும் அக்கினிதீர்த்தமும்

## 6. தலவிருட்சங்கள்

பழங்காலத்தில் மக்கள் மரங்களின் அடியிலேயே தெய்வங்களை வைத்து வழிபட்டனர். பின்னர், களி மண், செங்கல், மரம் இவைகளால் கோயில் அமைத் தனர். அவை அழிந்துபோகும் பொருள்களானபடி யால் கற்பாறைகளைக் குடைந்து கோயில் சமைத்தனர். அந்தகுடை கோயில்களையே **குகைக்கோயில்கள்** என்று வழங்கலாயினர். நாளடைவில் கற்பாறைகளை உடைத்து அவைகளைக்கொண்டு கருங்கற்கள்கொண்டு கோயில்களைக் கட்டினர். மரங்களின் அடியில் ஆதியில் கோயில்கள் ஏற்பட்டதால் அந்த மரங்களைப் புனித மாகக்கருதி அவைகளைத் **தலவிருட்சங்கள்** எனப் பெய ரிட்டழைத்தனர். அந்த மரங்களின் பெயர்களாலேயே பல தலங்களின் பெயர்களும் ஏற்பட்டன. தில்லை வனம் (சிதம்பரம்), கடம்பவனம் (மதுரை), சண்பக வனம் (திருநாகேச்சுரம்), மகிழவனம் (நீடூர்), மாதவி வனம் (திருமுருகன்பூண்டி), வேணுவனம் (திருநெல் வேலி), திருவாலங்காடு, கச்சி நெறிக்காரைக்காடு, பனங்காடு, பனையூர், வேற்காடு முதலியவை அத்தகை யன. திருவெண்காட்டுத் தலத்துக்கும் **வில்வவனம்** என்ற ஒரு பெயருண்டு. சாதாரணமாக, பெரும் பாலான தலங்களில் ஒரே ஒரு தலவிருட்சம்தான் இருக்கும். ஆனல் திருவெண்காட்டில் மூன்று தல விருட்சங்கள் உள்ளன. அவை வடவால், கொன்றை, வில்வம் என்பன.

**வடவால விருட்சம்** சந்திர தீர்த்தத்தின் கீழ்பால் இருக்கிறது. தழைத்துத் தண்ணிழல் பரப்பி அழ குடன் விளங்குகிறது. கயாக்ஷேத்திரத்திலுள்ளது போலவே இது **அக்ஷயவடம்** என்னும் அழியாத ஆல மரம். கயாவை விஷ்ணுபாதம் என்றும், திருவெண் காட்டிலுள்ளதை **ருத்ரபாதம்** என்றும் கூறுகின்றனர். இவ்வாலமரத்தினடியிலிருக்கும் இருபாதங்கள் பக்கத் தில் ருத்ரபாதம் என்ற பெயர் பொறிக்கப்பட்டிருப்ப

தைப்பார்க்கலாம். இம்மரத்தடியில் மக்கள் பிதிர்க் கடன் செய்து செல்கின்றனர்கள்.

**வில்வமரம்** அம்பிகை கோயிலுக்கு வடக்கேயுள்ள பிரமசமாதியின் அருகே இருக்கிறது.

**கொன்றைமரம்** வெளிப்பிரகாரத்தில் அகோரமூர்த்தியின் பின்புறம் சந்திர தீர்த்தத்தின் தென் கரையில் இருக்கிறது.

## 7. தலப்பெருமை

ஆன்றோர்கள் காசிக்குச் சமானமாக ஆறுதலங்களைக் கூறுவர். அவை திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு (சாயாவனம்), திருவாஞ்சியம் என்பன. அவைகளில் ஒன்று இத்தலம். தாண்டவங்கள் ஒன்பது. இறைவன் இயற்றிய ஏழு தாண்டவங்களும் சிவபரமானது. கௌரியும், காளியும் ஆடிய இரண்டும் சக்தி பரமானது. இந்த நவதாண்டவ க்ஷேத்திரங்களுள் திருவெண்காடு முதன்மையானது. உலகத்திலுள்ள உயிர்கள் உய்யும் வண்ணம் இங்கே பெருமான் ஞானநிருத்தம் செய்தார். சுவேதாரண்யேசுவரர், நடராஜர், அகோரமூர்த்தி என்ற மூன்று மூர்த்திகளும், சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று தீர்த்தங்களும், வடபால், கொன்றை, வில்வம் ஆகிய மூன்று தலவிருட்சங்களும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆன ஒவ்வொன்றும் மும்மூன்றாக விளங்கும் தனிச்சிறப்புடையது இத்தலம். சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூவர்களும் பதிகங்கள் பாடிய பெருமையும் கொண்டது. "எரிவீசியிரவாடும் இறைவர்மேய வெண்காடே வெண்காடே என்பீராகில் வீடாத வல்வினை நோய் வீட்டலாமே" என்று அப்பர்பெருமானும், "வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர் தோய் வினையார் அவர்தம்மைத் தோயவாம் தீவினையே,"

"மேதகு வெண்காட்டான் என்று உள்ளாடி உருகா தார் உணர்வுடைமை உணரோமே" என்று ஞான சம்பந்தப் பெருந்தகையாரும் திருவாய்மலர்ந்தருளி யுள்ளனர். காவிரி சங்கம நீராடச் செல்லும் மக்கள் திரும்புங்கால் திருவெண்காட்டு முக்குள நீராடி இறை வனை வழிபட்டுச் செல்லும் வழக்கம் இன்றும் காணக் கூடியதொன்ரும்.

**அகோரமூர்த்தி:** இத்தலப் பெருமைக்கு மிக முக்கிய காரணமாக இருப்பவர் இந்த மூர்த்தி. இவர் இங்கு எழுந்தருளியிருப்பதன் காரணத்தை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். முன்னொருகால் மருத்துவன் என்ற அசுரன் இருந்தான். அவன் பிரமதேவரிடம் வேண்டிப்பெற்ற வர பலத்தால் தேவர்களுக்குத் துன்பம் விளைவித்துவந்தான். தேவர்கள் சிவபெருமா னிடம் முறையிட, அவர் அவர்களைத் திருவெண்காடு சென்று வேற்றுருக் கொண்டு வதியும்படி ஆணையிட் டார். அவர்களும் அப்படியே செய்தார்கள். இதை யறிந்த மருத்துவாசுரன் இங்குவந்து அவர்களுடன் போர் தொடங்கினுன். சுவேதனப்பெருமான் அவனு டன் போர் செய்ய இடபதேவரை ஏவினுர். அசுரன் அவருடைய ஆற்றலுக்குத் தோற்று, சிவபெருமானை நோக்கித் தவம் செய்து ஒரு சூலாயுதம் பெற்று மீண்டும் சண்டைக்கு வந்தான். இடபதேவரின் கொம்புகளையும் காதுகளையும் அறுத்து அவர் உடலில் காயங்களையும் உண்டாக்கியது அவன் சூலப்படை. (அந்த அடையாளங்கள் சுவேதனப்பெருமான் சந்நிதியி லுள்ள நந்திதேவர்மீது இப்போதும் காணலாம்.) அவர் சுவேதனநாதரிடம் முறையிட்டார். பெருமான் மருத்துவன்மீது பெருங்கோபம் கொண்டார். அக் கோபம் எதிர்தோன்ற, இறைவன் அதை நோக்கி "மருத்துவனை மாய்த்து வருக" என்று ஆணையிட்டார். அப்பெருஞ்சினமே சிவந்த குஞ்சியுடைய அகோர வடி வாகி, திருமேனி நீருண்ட மேகமெனத்திகழ, நெற்றிக்

கண் நெருப்பைக் கக்க, அணிமணிகள் ஒளிவீச, கண்ட மாலை கவினுற விளங்க, கோரப் பற்கள் இலங்க, துடி, மணி, பலகை, வாள், சூலம், வெண்டலை, கடி என்ற படைகளைக் கரங்களில் ஏந்தி மருத்துவாசுரனை அண்மியது. அவன் பயந்து ஒளியுருவாகி அகோர மூர்த்தியின் திருவுருவிற் கலந்தான். தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இசைந்து அகோர சிவனாரும் இத்தலத்தே எழுந்தருளியிருப்பாராயினர். அவருடைய திருவுருவத்தை விளக்கும் தலபுராணப் பாடல் இது:—

கருநிறமு மணிமாலை புனையழகும்
வளையெயிறும் கவினைச் செய்ய
எரிசிகையும் நுதல்விழியும் நடைக்கோல
இணையடியும் இலக எட்டுக்
கரநிலவ மணிபலகை வெண்டலைவாள்
கடிதுடியோர் சூல மேற்று
வெருவமருத் துவனையடர் அகோரசிவன்
துணைப்பதச்சீர் விளம்புவாமே.

**மெய்கண்டார்:** "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ" என்று போற்றினார் தாயுமானவர். அந்த மெய்கண்டதேவர் இத்தலத்தே தோன்றிய வரலாறு இத்தலப் பெருமைக்கு சான்று தருகின்றது. பெண்ணாகடம் என்ற ஊரில் வாழ்ந்த அச்சுத களப்பாளர் என்ற வேளாளருக்குப் பிள்ளையில்லாக் குறையிருந்தது. அதனை அவருடைய குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதர் அருணந்தி சிவாசாரியாரிடம் விண்ணப்பித்தார். அவ்வாசிரியர் திருமுறைகளைப் பூசித்துக் கயிறு சாத்திப் பார்த்தார்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை(வு)
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே

என்ற சம்பந்தப் பெருமானுடைய திருப்பாடல் அகப்பட்டது. அப் பாசுரத்தில் திருவெண்காட்டி லுள்ள முக்குளத்தில் நீராடுவோருக்குப் பிள்ளையி னோடு எண்ணிய யாவும் கைவரும் என்று அறுதி யிட்டுக்கூறி யிருத்தலின், அருணந்திசிவனார், அச்சுத களப்பாளரைத் திருவெண்காட்டுக்குச்சென்று முக்குள நீரில் முழுகி அங்கெழுந்தருளியிருக்கும் பெருமானையும் வழிபட்டு வரப்பணித்தார். அவ்வாறே அச்சுதகளப் பாளரும் மனைவியுடன் திருவெண்காடு சென்று முக் குள நீராடி வழிபட்டு வந்தார். சிலகாலத்தில் அந்த அம்மையாரும் வயிறு வாய்க்கப்பெற்று, ஆண்மகவு ஒன்றை ஈன்றெடுத்தார். அக் குழந்தைக்கு, **சுவேதனப் பெருமாள்** என்ற திருநாமத்தைச் சூட்டினர். அந்த இளஞ் செஞ்ஞாயிறே **மெய்கண்டார்** என்ற தீட்சா நாமம் பெற்று, **சிவஞானபோதம்** என்னும் சைவசித் தாந்தத் தலைமணி ஞான நூலை இயற்றியருளியது. சித்தாந்த ஞான பரம்பரைக்கு முதல் தலைவராக விளங்கியவர் அந்த மெய்கண்டதேவ நாயனாரேயாகும். அவருடைய குலகுருவும் பின்னர் முதல் மாணக்கராக வும் ஆன் அருணந்தி சிவாசாரியார்,

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவநாதன்
புண்டரிக மலர்த்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வோம்

என்ற வணக்கப் பாடலை 'சிவஞான சித்தியார் பர பக்கம்' என்ற தமது நூலில் கூறியுள்ளார்.

**பட்டினத்தடிகள்:** இத்தல மகிமைக்கு மற்றொரு அடியவரின் சம்பந்தமும் காரணமாகி நிற்கின்றது அவரே, "ஓட்டுடன் பற்றின்றி உலகைத்துறந்தசெல்வப்

பட்டினத்தார்'' என்று போற்றப்பெற்ற பெரியார். காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த சிவநேசர், அவர் மனைவியார் ஞானகலாம்பை இவர்களுக்கு ஒரு பெண் மகவு இருந்தும் ஆண்மகவு இல்லாத பெருங்குறை நீங்க அருந்தவம் கிடந்தனர். சின்னாளில் ஒரு ஆண் மகவும் பிறந்தது. அந்த குழந்தைக்குத் **திருவெண்காடர்** என்ற பிள்ளைத்திருநாமம் இட்டனர். அதற்கு ஐந் தாம் வயது எய்தியபோது தந்தையார் சிவபதமுற்ற னர். இளஞ்செம்மலும் தாயின் கருத்துப்படி கல்வி பயின்று, செந்நெறியொழுகலாயினர். இளமையிலேயே சிவபூசை இயற்ற வேண்டுமென்ற பேரவா இருந்தது. அதற்குத் தக்கதொரு அருட்குரவனை அவர் மனம் நாடித் தேடி நின்றது. ஒருநாள் அத்தோன்றல் துயில் கொள்ளும்போது கனவு கண்டார். சிவபெருமான் அடியார் வடிவத்துடன் தோன்றி "நாளைத் திங்கட் கிழமையன்று திருவெண்காடு அடைந்து இறைவரை வணங்கித் திருமுன் இருப்பின், பெரியவர் ஒருவர் வந்து சிவலிங்கம் ஒன்று தருவர்: அதனை வைத்துப் பூசனை புரிக'' என்று கூறி திருநீறு தந்து மறைந்தனர். கன வின் செய்தியை அன்னையார்க்கு அறிவித்து திரு வெண்காட்டுக்குப் பொழுது புலர்ந்தவுடனே புறப்பட வேண்டுமென்று சொன்னார் திருவெண்காடர். இரு வரும் திருவெண்காடு அடைந்து முக்குளநீராடி இறை வனை வழிபட்டுச் சந்நிதியில் இருந்தனர். தவமுனிவர் ஒருவர் அங்குவந்து, சிவலிங்கம் உள்ள சம்புடம் ஒன்றைக் கொடுத்து தீக்கை செய்வித்து அவரைச் சிவ பூசைக்கு உரியராக்கினர். அன்றே அவ்விடத்தில் பெட் டகத்திலுள்ள பெருமானைப் பூசனை செய்தார். அது ஆவணித் திங்கள் திருவோணமும் திங்கட்கிழமையும் பிரதோடமும் கூடியநன்னாள். காவிரிப்பூம்பட்டினத் திலே தோன்றியமையின் அவரைப் **பட்டினத்தார்** என்ற பெயரால் அழைக்கப்பட்டார். அவர் அருளிய நூல்கள் பதினொராந்திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

**இந்திரன் :** விருத்திராசுரனைக் கொன்ற பாவம் நீங்க இந்திரன் இத்தலத்தை யடைந்து முக்குள நீராடி இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றான். "விண்ணவர் கோன் வழிபட வெண்காடிடமா விரும்பினனே" என்றும், "நயந்தவர்க்கருள் பலநல்கி இந்திரன் கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்" என்றும் திருஞானசம்பந்தர் இச்செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். மாசி மாதத்தில் நடக்கும் திருவிழாவை **இந்திரமகோற்சவம்** என்று கூறுகின்றனர். இந்திரனே வந்து நடத்துவதாக ஐதீகம். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றதாக சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றிருப்பது ஈண்டு நினைவுகூர்தற்பாலது.

**ஐராவதம் :** துர்வாச முனிவர் இந்திரனுக்குக் கொடுக்கவந்த மலரை ஐராவதம் துதிக்கையால் வாங்கிச் சிந்தியது. முனிவர் முனிந்து "காட்டானையாகுக" என்று சாபமிட்டார். பல இடங்களிலும் திரிந்து அந்த யானை சுவேதவனம் அடைந்து தீர்த்தம் ஏற்படுத்தி பெருமானை வணங்கிப் பேறு பெற்றது. ஐராவதத்தால் அமைக்கப்பட்ட தீர்த்தம் இப்போது 'யானைமடு' என்று வழங்குகின்றது. "வெள்ளானை வேண்டும் வரங் கொடுப்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே" என்று அப்பரடிகளும், "வெளிய வுருவில் ஆனை வணங்கும் வெண்காடே", "அயிராவதம் பணியமிக்க தனுக்கருள் சுரக்கும் வெண்காடு", என்று ஆளுடைய பிள்ளையாரும் திருவாய்மலர்ந்தருளியுள்ளனர். இன்னும்,

காழுற்ற தந்தம் அறஏகி வெண்காட்டில் ஈசன்
கேழுற்ற தாளர்ச்சனை செய்து கிடைத்து வைகும்—வேழம்

என்று கந்த புராணத் திருவிளையாட்டுப் படலத்திலும்,

கோடு நான்குடைய வேழம் தானவன் குறைத்த கோட்டைப்
பாடற நோற்றுப் பெற்ற பதியிது

என்று திருவிளையாடற் புராண அர்ச்சனைப் படலத்திலும் இந்த நிகழ்ச்சி குறிக்கப் பெற்றிருக்கிறது.

இத்தலப் பெருமையை சிவபெருமான் திருவாக்கில் வைத்து திருமாலுக்கு எடுத்துச் சொல்லுவதாக அமைந்த தலபுராணப் பாடல்களில் இரண்டு பின்வருமாறு:—

வேதாந்தத் துரைப்ப தொன்றுண் டெவர்க்குஞ் சொல்லோம்
விரும்புதல்கண் டுனக்கிதனை விளம்பா நின்றோம்
நாதாந்தத் தொளியாய் நம்முருவமாகி ஞானமய மாகுமொரு
நகருண் டங்கே
கோதார்ந்த பிறப்பறலா நமதுசூலக் குடுமியிலத்
தலமிருக்குங் கூறும்போதிற்
சேதாம்பற் புதுமலராற் செங்காடாகிச் சிறையளியாற்
பசுங்காடாந் திருவெண்காடு.

மறந்துமதன் பெயருரைப்போர் நினைப்போ ரங்கே
வழிவசத்தா னடந்திடுவோர் மரணமாவோர்
பிறந்திடுவோ ரதிலிருப்போ ரெவரானாலும் பிறவாத
வரமளிக்கும் பெரிய மூதூர்
பறந்துவரு கொடிகளுக்கு மதனைச்சூழப் படர்ந்தகொடி
களுக்கு முத்தி பலிக்குமூதூர்
சிறந்ததிருச் சாய்க்காடு தலைச்சங்காடு திருநாங்கை
நகர்புடைசூழ் திருவெண்காடு.

## 8. வழிபட்டோர்

இத்தலத்து எம்பெருமானை வழிபட்டோர் பலர் என்று திருவெண்காட்டுப் புராணம் கூறுகிறது. அச்சுதகளப்பாளர் பிள்ளைப் பேறடைந்தது, பட்டினத்தார் சிவபூசை பெற்றது, இந்திரன் பாவம் நீங்கியது, ஐராவதம் சாபம் விலகியது முதலியவற்றைப்பற்றி முன்னர் கண்டோம். இவர்களேயன்றி, பிரமன், சந்திரன், சூரியன், அக்கினி, கணபதி, முருகன், சுவேதன், சத்தியநல்விரதன், வியாக்கிரபாதர், வேதராசி, சுவேதகேது, சிவப்பிரியர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலியோரும் திருவெண்காட்டீசரை வணங்கி அவருடைய திருவருளுக்குப் பாத்திரராயினர்.

**வேதராசி** என்ற அந்தணன் கட்டமுதுகொண்டு ஊருக்குச் செல்லும்போது ஆலமரப் பொந்தில் வைத்தான். அதிலுள்ள பாம்பு சோற்றில் நஞ்சை உகுத்தது. அதையறியாத வேதராசி அச்சோற்றை வேறொரு மறையவனுக்கிட, அவன் விடம் தலைக்கேறி மாண்டான். வேதராசியைப் பிரமகத்தி பின்தொடர, அவன் திருவெண்காட்டை யடைந்ததும் அது விலகிப் போயிற்று. அவ்வந்தணன் இறைவனை வழிபட்டுச் சில காலமிருந்து எமபாதையின்றி பெருமான் திருவடி நீழல் எய்தினன்.

**சுவேதகேது** என்பவர் உத்தாலக முனிவரின் புத்திரர். அவருடைய வாழ்நாள் எட்டு வயதுடன் முடியுமென்பதை ஞானத்தாலுணர்ந்து திருவெண்காடு சேர்ந்து, சிவலிங்கம் அமைத்து வழிபட்டு வந்தார். எட்டு வயது முடியும் நாளில் எமன்வந்து அவர்மீது பாசக் கயிற்றை வீசினன். பெருமான் வெளிப்பட்டு காலனுடைய வலிமையைத் தொலைத்தார். சுவேதகேது பின் சிலகாலமிருந்து முத்திப்பேறு பெற்றார். சம்பந்தர் பாடல் ஒன்றில் இந்த செய்தி குறிக்கப் பெறுகிறது.

**சுவேதன்** என்ற மன்னன் தன்மைந்தனாகிய வாதாவிக்கு அரசுரிமையைக் கொடுத்துவிட்டு, மனைவியாகிய சுலோசனையுடன் திருவெண்காட்டுக்கு வந்து சிவலிங்கம் அமைத்துப் பூசித்து வந்தான். ஒருநாள் எமன் வந்து அவன் கழுத்தில் பாசத்தைப் பூட்டினன். மன்னவன் சிவலிங்கமூர்த்தியைத் தழுவிக்கொண்டான். சுவேதவனநாதர் தோன்றவும் அந்தகன் பயந்தோடிப்போய் வீழ்ந்திறந்தான். சுவேதன் சிவசாரூபத்தைப் பெற்றான். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருவெண்காட்டீசர் காலனுக்கு உயிர்கொடுத்தார். காலன் வலி தொலைக்கப் பெற்ற காரணத்தால் இத்தலம் காலாஞ்சரம் என்ற பெயர் பெற்றது.

## 9. கர்ணபரம்பரைக் கதைகள்

**பிள்ளையிடுக்கியம்மன்:** சம்பந்தர் தலங்களை வழி பட்டு வருகையில் திருவெண்காட்டு எல்லையை அடைந் தார். அவருக்கு அங்குள்ள எல்லாப் பொருள்களும் சிவலிங்க மயமாகத் தோன்றியது. ஆதலின் இத் தலத்தை மிதித்தற்கஞ்சி அம்பிகையைக் கூப்பிட் டழைத்தார். பெரியநாயகியும் சென்று ஆளுடைய பிள்ளையாரை இடுப்பில் எடுத்து வந்தார். அப்படிக் கொண்டு வந்ததால் "பிள்ளையிடுக்கி அம்மன்" என்ற பெயர் ஏற்பட்டது. பிள்ளையை இடுப்பில் வைத்துள்ள அம்பாள் உருவம் பிரமவித்தியாநாயகி கோயில் மேற்கு உட்பிரகாரத்தில் இருக்கிறது. "ஊரெலாம் சிவலோகம் மணல் எலாம் சிவலிங்கம்" என்று தொடங்கும் பாட லில் இறைவனுடைய வியாபகத் தன்மை கூறப் பெற் றிருக்கிறது. அப்பாடலை இந்நூலில் பிறிதோரிடத்தில் காண்க. சம்பந்தர் அம்பாளைக் கூப்பிட்ட இடத்தி லுள்ள குளத்தைக் **கூப்பிட்டான்குளம்** என்பர். அது இப்போது **கோட்டான்குளம்** என்று வழங்குகிறது.

**விலங்குதறித்த விநாயகர்:** "பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரிதரிது" என்று திருவெண்காடரின் பெருந் துறவைப் புகழ்ந்து கூறினார் தாயுமானப் பெருந்தகை யார். பட்டினத்தார் துறவுக் கோலங்கொண்டு வெளி வந்தபோது தமது கணக்கரான சேந்தனாரைத் தமது கருவூலத்திலுள்ள பொருள்களை மக்கள் எடுத்துப் போகும்படி திறந்துவைக்கக் கட்டளையிட்டார். சேந் தனார் அவ்வாறே செய்தார். பொதுமக்கள் எடுத்துக் கொண்டது போக எஞ்சியதை அரசன் கைக்கொண் டான். அடிகளாரின் நிதிகள் முழுவதையும் தனக்குக் காட்டவில்லை என்று எண்ணி அரசன் சேந்தனாரைச் சிறையிலிட்டதுமன்றி, அவர் பொருளையும் கவர்ந்து கொண்டான். சேந்தனாரின் மனைவி தன்மைந்தனுடன் வேற்றூர் சென்று கூலிவேலை செய்து வாழ்ந்தனள்.

பட்டினத்தடிகள் பல தலங்களையும் வணங்கி, திருவெண்காட்டுக்குத் திரும்பினார். அதையறிந்த சேந்தனார் மனைவியும் மகனும் அடிகளாரை அண்மி சேந்தனாரின் நிலையைத் தெரிவித்தனர். உடனே திருவெண்காட்டடிகள்,

மத்தனை தயிருண் டானும் மலர்மிசை மன்னினானும்
நித்தலும் தேடிக் காணா நிமலனே நீஇன் றேகிச்
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டுளானே

என்ற பாடலைப்பாடியருள, விநாயகப்பெருமான் சென்று சேந்தனாரின் விலங்கை நீக்கினார். ஆதலின் அவருக்கு "விலங்குதறித்த விநாயகர்" என்ற பெயர் ஏற்பட்டது. அவருடைய கோயில் திருவெண்காட்டீசர் கோயிலுக்குத் தென்மேற்கே சிறிது தொலைவில் இருக்கிறது.

**முக்குள நயினார்கள்:** நயினார் என்ற ஒரு சைவமரபினர் உண்டு. அவர்கள் திருவெண்காட்டு முக்குளங்களிலும் தலையில் விளக்குகளை வைத்துக்கொண்டு மூழ்கியெழ அவ்விளக்குகள் அணையாமல் இருந்தனவாம். அதனால் அவர்களை "முக்குள நயினார்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் என்று ஒரு கதை வழங்குகிறது.

**பஞ்சம்தீர மழை:** ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்குமுன் மழையில்லாமல் கடும்பஞ்சம் ஏற்பட்ட போது பொதுமக்கள் அகோரமூர்த்தி சந்நிதியில் கடுமையான விரதமிருந்து மணிகர்ணிகை யாற்றுக்குச் சென்றனர். அப்படி அவர்கள் போகிற வழியிலே தாங்க முடியாத மழை பெய்தது.

**தொத்துநோய் ஒழிய வழி:** திருவெண்காட்டிற்கருகிலுள்ள கடற்கரை மீனவர் சேரிகளில் தொத்துநோய் பரவினால் அவர்கள் அகோரக் கடவுளுக்கு வழிபாடு செய்வார்களாம். அப்போது ஒருவர்மேல் ஆவேசம்

வர, அவர் அப்படியே சேரிகளுக்குச் சென்று திருநீறு கொடுக்க அந்தநோய் மறைந்துவிடுவது வழக்கமாம். கோயிலில் இப்போது அலுவல் பார்த்துவரும் பெரிய பிள்ளை என்ற திரு. மீனுட்சிசுந்தரம் பிள்ளையின்மேல் அவ்வித ஆவேசம் வருவதுண்டாம்.

## 10. தலத்தைப்பற்றிய நூல்கள்

**திருஞானசம்பந்தர் :** இத்தலத்திறைவன் பேரில் மூன்று தேவாரத் திருப்பதிகங்கள் ஓதியருளியுள்ளனர். அவைகளில் திருவெண்காட்டின் இயற்கைக் காட்சியையும், இறைவன் திருக்கோலவனப்பையும், அவனுடைய வியாபகத்தன்மையையும், அடியார்க்கருளும் பெற்றியையும், எமன்திறலழித்த வன்மையையும், இந்திரன், ஐராவதம் வழிபட்டுப் பேறுபெற்றதையும், முக்குளநீர்ப் பெருமையையும் கூறியிருக்கின்றுர். பசுங்கிளிகளும் இறைவன் திருநாமத்தைப் பண்மொழியால் பயில்கின்றன என்றும், முக்குள நீராடி வழிபடுவர் பிள்ளைப்பேறடைவதுடன் நினைத்த வரம்பெறுவர், அவர்களைத் தீவினைகள் சாரா என்றும், 'தொழுவார் தங்கள் உறுநோய்கள் தள்ளிப்போக அருளும்தலைவன்' என்றும், உள்குவார் உள்ளத்தே புகுவான் என்றும் இன்னும் பலவாருக சிவபெருமான் பெருமைகளை விதந்தோதியுள்ளார்.

**திருநாவுக்கரசர் :** இரண்டு பதிகங்கள் பணித்துள்ளார். மேலும், க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம், பலவகைத் திருத்தாண்டகம் இவைகளிலும் திருவெண்காட்டைப்பற்றிப் பாடியருளியுள்ளனர். அவரே திருமுதுகுன்ற (விருத்தாசல)த் திருப்பதிகப் பாடல் ஒன்றில் "வெண்காடு மேவிய விகிர்தன் தன்னை" என்று கூறியிருக்கிருர். சம்பந்தர் பதிகத்தின் முதற்பாடலான "கண்காட்டு நுதலானும்" என்பதைப் போலவே அப்பர் திருப்பதிக முதல் பாடலும் அமைந்

திருப்பது கண்டு இன்புறத்தக்கது. திருக்குறுந் தொகைப் பாடல்கள் நெஞ்சைப்பார்த்து அறிவுறுத்து வாக உள்ளன. "நெஞ்சமே! இறைவன் உறையும் திருவெண்காடடைந்து உய்வாயாக" என்று கூறு கிறார். திருத்தாண்டகத்தில் சிவபெருமான் திருமேனி யழகையும், அவன் எங்கும் தங்கி நிற்கும் எழிலையும், பிச்சையேற்றுத்திரியும் தன்மையையும், அடியார்க்கு வேண்டும்வரம் அளிக்கும் பண்பையும், இன்னும் அவ னது திருச்செயல்கள் பலவற்றையும் அகப்பொருட் டுறையில் அழகுபெற அமைத்துத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார். ஒரு தாண்டகச் செய்யுளில் "வெண்காடே என்பீராகில் வீடாத வல்வினைநோய் வீட்டலாமே" என அறிவுறுத்துகிறார்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்** இப்பதிக்குப் பத்துப் பாசுரங்கள்கொண்ட ஒரு பதிகம் பாடியிருக்கின்றனர். ஒவ்வொரு பாடலின் முற்பகுதியில் இறைவனது சிறப்புக்களைக்கூறி, பிற்பகுதியில், "இவ்வளவு பெரு மைகளையுடையநீர் மனைகள்தோறும் தலைகையேந்தி விடங்கராகித்திரிவதும், காமவேளைக் கண்ணழலால் எரித்ததும், பிச்சை ஏற்க எருதேறி அலைவதும், கடலின் நஞ்சமுண்டதும், வேதமோதித் திரிவதும், யானையை உரித்ததும், அயனும் மாலும் அணுகா வண்ணம் அனல்பிழம்பாய் நின்றதும் எதற்காக" என்று கேட்கும் முறையில் அமைந்திருக்கிறது.

**மாணிக்கவாசக சுவாமிகள்** அருளிய திருவாசகத்தின் **கீர்த்தித் திருஅகவலில்** "விருந்தினனாகி வெண்காடதனில் குருந்தின்கீழ் அன்றிருந்த கொள்கையும்" என்று கூறி யிருக்கின்றனர். மேலும், அவரியற்றியருளிய **திருக் கோவையாரிலும்** "வேலன் புகுந்து வெறியாடுக" என்று தொடங்கும் பாடலிலும் வெண்காட்டைக் குறிப்பிடு கிறார்.

**கபிலதேவ நாயனர்** இயற்றிய "**சிவபெருமான் திரு இரட்டை மணிமாலை,**" "**சிவபெருமான் திருவந்தாதி**" என்ற

இரண்டு பிரபந்தங்களும் பதினெராந்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. வெண்காடர் அன்பர் சித்தத் தடங்குவர் என்றும், துயரத்தைத் தீர்ப்பரென்றும் அந்த நூல்களிலுள்ள இரண்டு பாடல்களில் கூறியிருக்கிறார்.

**பரணதேவ நாயனர்** அருளிய **'சிவபெருமான் திருவந்தாதி'** என்ற நூலும் பதினெராந்திருமுறையில் சேர்க்கப் பெற்றிருக்கிறது. "புகலூர் உடையாய்" என்று தொடங்கும் பாசுரத்தில் 'வெண்காடா வேலை விட முண்டாய் வெள்ளேற்றாய் வெண்காடா என்பேனே நான்" என்று சொல்லியிருக்கிறார்.

**பட்டினத்தார்** பாடியருளிய **"திருவிடை மருதூர் மும் மணிக்கோவை"**, **"திருவேகம்பமுடையார் திருவந்தாதி"** என்றவைகளும் பதினெராந் திருமுறையிலுள்ளன. மும் மணிக்கோவை, 'தெய்வத்தாமரை' என்று தொடங்கி 'தெய்வத்தாமரையே' என்று முடிகிறது. அதன் கடைசி பாடலில் "வெண்காடன்" என்று குறித்திருக்கிறார். திருவந்தாதியில், "நினைவார்க்கருளும் பிரான்" வதியும் பதிகளைச் சொல்லும்போது திருவெண்காட்டையும் சொல்லியிருக்கிறார்.

**சேக்கிழார்** இயற்றிய **திருத்தொண்டர் புராணம்** என்னும் பெரிய புராணத்தில் சம்பந்தர் புராணத்திலும், ஏயர் கோன் கலிக்காம நாயனர் புராணத்திலும், திருவெண் காட்டைப் பற்றிக் கூறியிருக்கிறார். திருச்சாய்க் காட்டை வணங்கியபின் சம்பந்தர் திருவெண்காடு போந்து வழிபட்டதை நான்கு பாடல்களில் சொல்லி யிருக்கிறார். ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணத் தில் சுந்தரர் திருச்சாய்க்காட்டை வணங்கி, திருவெண் காட்டிற்கு வந்து வழிபட்டுப் பதிகம்பாடி திருநனி பள்ளிக்குச் சென்றதைக் கூறியிருக்கிறார்.

**காஞ்சிபுரம் - சிதம்பரமுனிவர்** தம்முடைய **க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழில்** இத்தலத்தைப்பற்றி ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

**சோமசுந்தரதேசிகர்** என்பாரும் **சிவாலய மான்மியக் கோவை** என்ற நூலில் ஒரு பாடலில் இத்தலத் திறைவனையும் தேவியையும் போற்றியிருக்கிறார்.

**பரஞ்சோதி முனிவர்** தம்முடைய **திருவிளையாடற் புராண** அருச்சனைப் படலத்தில் இப்பதியைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

**கச்சியப்பசிவாசாரியார், கந்தபுராணம்**—திருவிளையாட்டுப் படலத்தில் ஒரு பாடலில் திருவெண்காட்டில் ஐராவதம் வழிபட்டதைக் குறிக்கிறார்.

**சைவ - எல்லப்ப நாவலர்** என்ற பெரும்புலவர் திருவெண்காட்டுக்கு அண்மையிலுள்ள இராதாநல்லூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். சொல்நயம், பொருள் நயம்படக் கவிபாடுவதில் வல்லவர். சைவ சமயத்தில் அழுந்திய பற்றுடையவர் ஆதலின் அவர் பெயருக்கு முன் **சைவ** என்ற அடைமொழி கொடுத்து அழைத்தனர்.

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச்
[செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்
துணையே


என்ற அவருடைய பாடலே இதற்குச் சான்றுபகரும். அவரியற்றிய நூல்கள்-அருணாசல புராணம், திருவிரிஞ்சைப் புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவாரூர்க்கோவை, செவ்வந்திப் புராணம், **திருவெண்காட்டுப் புராணம்**, அருணையந்தாதி, அருணைக்கலம்பகம் முதலியன. அருணைக்கலம்பகம்

என்னும் நூல் சிறந்த கலம்பகங்களுள் ஒன்று என்பது அறிஞர் கொண்ட முடிபு. சௌந்தரியலகரிக்கும் உரை வரைந்தார் என்று கூறுவர். இவர் இயற்றிய திருவெண்காட்டுப் புராணத்தில் 18 சருக்கங்களும், 614 பாடல்களும் உள்ளன. ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் பெருந்தோட்டம் - தெ. சி. துரைசாமிப் பிள்ளை யென்பார் எழுதிய வசனத்துடன் இந்நூல் 1905-ஆம் ஆண்டு அச்சிடப்பெற்றது. இப்போது அந்த அச்சுப் பிரதிகள்தானும் கிடைப்பது அரிதாகி விட்டது.

**சிவானந்தன்** என்பவர் **ஸ்ரீ அகோரர் அந்தாதி** என்ற நூலைப் பாடியிருக்கிறார். அதுவும் 1906-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றது. அந்த அச்சுப் பிரதிகளும் இப்போது கிடைப்பதில்லை.

**வடமொழிப் புராணம்: ஸ்வேதாரண்ய க்ஷேத்ரமாகாத்ம்யம்** என்ற வடமொழி நூல் இந்த ஸ்தலத்தைப் பற்றியதே. தஞ்சை சரஸ்வதி நூல் நிலையத்திலுள்ள ஏட்டுச் சுவடியினின்றும் கையெழுத்துப் பிரதி செய்யப்பட்டு சுவேதாண்யேசுவரர் ஆலய அர்ச்சகர் திரு. சு. நடேச குருக்களிடம் இருக்கிறது. இது இன்னும் அச்சாக வில்லை. இந்த மகாத்மியம் ஸ்காந்தபுராணம் சங்கர சம்ஹிதையில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 51 அத்தியாயங்கள் கொண்ட அரிய கருத்துக்கள் நிறைந்த விரிவான நூல். அதிலிருந்து முக்கியமான சிலவற்றை எடுத்துக் காட்டாகச் சொல்லவேண்டியது அவசியம்.

சுவேதவனம், வில்வவனம், ஸ்ரீநகரம், காலாஞ்சரம், மோட்சத்துவாரம், ஆதிசிதம்பரம், மகாரங்கம், ஸிதாரண்யம் என்று இத்தலத்தின் பெயர்கள் கூறப்படுகிறது. தர்ம சொரூபமான நந்திதேவர் இங்கே மருத்துவாசுரனுடன் போர்செய்ததால் இத்தலத்துக்கு **தர்மஸ்தானம்** என்ற பெயரும் உண்டு.



நூற்றுக்கால் மண்டபம்

**மூன்று தீர்த்தமகிமை:** எம்பெருமான் திருநடனம் செய்யும் முக்கண்களிலிருந்து நீர்த்துளிகள் விழுந்து மூன்று தீர்த்தங்களாயின. மூன்று என்று வரப்பட்டவையெல்லாம் இவைகளில் உள்ளன. பிரம, விஷ்ணு, ருத்திரன்; இச்சா, கிரியா, ஞானசக்திகள்; சத்வ, ரஜோ, தமோகுணங்கள், காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி; சூரியன், சந்திரன், அக்கினி: சுவேதாரண்யர், நடராஜர், அகோரர்; காளி, துர்க்கை, பிர்ம வித்தியாநாயகி என்பன போன்றவை.

**வழிபட்டோர்:** இங்கே இறைவனை வழிபட்டு பிரமன் ஆத்மானம் அடைந்தான்; இந்திரன் வச்சிராயுதம் பெற்றான்; வியாக்கிரபாதர் நோய் நீங்கப்பெற்று முத்தி எய்தினர்; ஜனர்த்தனர் இலட்சுமி, சக்கரம் இவைகளைப்பெற்றார்; தேவர்கள் சிரேஷ்டத்தன்மையை அடைந்தனர்; அகத்தியர் லோபமுத்திரையை மனைவியாகக்கொண்டார்; சுக்கிரன் அசுரகுருத்தன்மையையும், மிருத்த சஞ்சீவினி வித்தையையும் அடைந்தான்; இராமர் சேதுபந்தனமும், இராவணவதமும் செய்தார்; கிருஷ்ணத்வைபாயனர் ஆத்மஞானம் கைவரப்பெற்றார்; சுகர்வியாசபுத்திரராகி ஆத்மஞானத்தையடைந்தார்; வசிஷ்டர் பிரமபுத்திரராகி அருந்ததியை மனைவியாகக்கொண்டார்; நாரதர் வீணஞானத்தையும் பரமஞானத்தையும் அடைந்தார்: மகாலட்சுமி மகாவிஷ்ணுவையும் உலகத்தைக் காப்பாற்றுதலையும் பெற்றார்.

**மருத்துவாசுரன்** சூலாயுதத்தினால் நந்திகேசுவரைக் குத்திக் காயங்கள் ஏற்படுத்தினன். அவர் சிவபெருமானைத் தோத்திரம் செய்தார். பரமேசுவரனின் அகோரமுகம் தோன்றிற்று. அக்கினிப் பிழம்பாக எழுந்தது. அதைப் பார்த்தவுடன் மருத்துவாசுரன் சூலத்துடன் இடது பக்கத்தில் விழுந்து, தோத்திரம் செய்தான். எட்டுக் கைகள் முதலியவற்றுடன் அகோர மூர்த்தியின் உருவம் உண்டாயிற்று. நந்திகேசரின்

காயங்கள் மறைந்தன. மாசி மாதம் கிருஷ்ணபட்சம் பிரதமை பூரநட்சத்திரம், ஞாயிற்றுக்கிழமை இரவு 12-மணிக்கு அகோரமூர்த்தி உண்டானார். அந்தநாளில் அவரைப் பூசனையும் உபாசனையும் செய்தால் சகல நன்மைகளையும் பெறலாம்.

**புதன் :** சந்திரனுக்கும் தாரைக்கும் பிறந்தவர். சந்திரன் புதனுடன் சுவேதாரண்யம்வந்து பெருமானை வழிபட்டு குருத்துரோகம் செய்த பாவத்தையும், க்ஷய ரோகத்தையும் நீங்கப்பெற்றான். இந்த தலத்தில் புத னுக்குத் தனிக்கோயில் இருக்கிறது. சண்டேசுவரரைத் தெரிசிக்கும்படியான அவசியம்போல இத்தலத்தில் புதனைத் தெரிசிக்கவேண்டும்.

**இளங்கோவடிகள்** இயற்றிய சிலப்பதிகாரத்தில் கனாத்திறமுரைத்த காதையில் சொல்லப்பட்டிருக்கும் **சோமகுண்டம், சூரியகுண்டம்** இவைகள் இத்தலத்தி லுள்ள சோம (சந்திர) தீர்த்தம், சூரிய தீர்த்தமாக இருக்கலாம் என்று பெரியோர்கள் கருதுவதாக டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் அந்நூற்பதிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த சிலப்பதிகார வரிகளை மேலே **தீர்த்தங்கள்** என்ற பகுதியில் கொடுக்கப்பட்டிருக் கிறது.

**வான்மீகி இராமாயணத்தில்** "சுவேதாரண்யத்தில் ருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்ததுபோல கரன் இராமருடைய சராக்கினியால் தகிக்கப்பட்டு பூமியில் விழுந்தான்" என்று கூறப்பட்டிருக்கிறது. "வேலை மலிதண்கானல்' என்றுதொடங்கும் திருவெண்காட்டுப் பதிகப்பாடலில் சம்பந்தர், "வெங்காலன் உயிர்விண்ட பினை நமன்தூதர் ஆலமிடற்றான் அடியார் என்றடர அஞ்சுவரே" என்று கூறியிருக்கிறார். இந்த ஊர் சங்கல் பத்தில் "பிர்மஸ்மசானம்" என்று சொல்கிறார்கள். **பிர்மசமாதி** அம்பிகைக் கோயிலுக்கு வடபால் இருக் கிறது. இது, "எண்ணிலி இந்திரர் எத்தனையோ **பிரமர் களும்** மண்மிசை மால்பலர்மாண்டார்", "நூறுகோடி

பிரமர்கள் நொந்தினர்'' என்ற கணக்கில் இறந்தவர்களுடைய ஈமச்சுடலையாகும். "கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை'' என்ற மணிவாசகர் வாக்கையும் நினைவுபடுத்துகிறது.

இத்தலப் பெருமைகளைப்பற்றிக் கூறும் நூல்களிலிருந்து சில பாடல்களை அன்பர்கள் படித்தின்புறுவதற்காக இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## II. கல்வெட்டுக்கள்

திருவெண்காட்டுக் கோயிலில் பலதமிழ், கிரந்தக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றை அரசாங்கத்தார் 1896-ஆம் ஆண்டில் 110 முதல் 122 வரை 13 எண்களிலும், 1918-ஆம் ஆண்டில் 442 முதல் 521 வரை 80 எண்களிலும் படியெடுத்திருக்கின்றனர். 1896-ல் எடுத்தவற்றை "தென் இந்தியக் கல்வெட்டுக்கள்'' ஐந்தாம், பகுதியில் (973-987) வெளியிட்டிருக்கின்றனர். 1918-ல் பதிவு செய்தவைகளின் சுருக்கத்தை 1919-ஆண்டுக் கல்வெட்டு அறிக்கையில் கொடுத்திருக்கின்றனர்.

திருவெண்காட்டீசர் கோயில் "வடகரை நாங்கூர் நாட்டு நாங்கூரில்'' உள்ளதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இந்த நாங்கூர் நாட்டைத் தன்னகத்தே கொண்டவளநாடு, இராஜராஜ வளநாடு, இராஜேந்திர சிம்மவளநாடு, இராஜாதிராஜ வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு என்ற பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கிறது. வெவ்வேறு சோழமன்னர்களின் காலத்தில் இப்பகுதியை இப்பெயர்களிட்டழைத்திருக்கின்றனர்.

இந்த கல்வெட்டுக்கள் பல மன்னர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்றவை. இராஜராஜன் I, இராஜேந்திரன் I, வீரராஜேந்திரன் II, குலோத்துங்கன் I, விக்

கிரமசோழன், இராஜாதிராஜன் I என்ற சோழமன்னர்கள், குலசேகரபாண்டியன், கோமாறவர்மன் விக்கிரமபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், பராக்கிரமபாண்டியன், ஸ்ரீவல்லபதேவன் என்ற பாண்டிய மன்னர்கள், விருப்பண்ண உடையார், கிருஷ்ண தேவராயர் என்ற விஜயநகர அரசர்கள், துக்கோஜி என்ற தஞ்சை மகாராட்டிர மன்னர் முதலியவர்கள் காலத்தில் ஏற்பட்டவை. இவை கி. பி. 10–ஆம் நூற்றுண்டு முதல் 18-ஆம் நூற்றுண்டுவரையுள்ளவை.

கோயிலின் இரண்டு இராஜ கோபுரங்கள், இரண்டு கட்டை கோபுரங்கள் இவைகளின் வாயில்கள், சுவேதராண்யர் கர்ப்பக்கிரகச் சுவர்கள், அதற்கு வடபாலிருக்கும் இரண்டு தூண்கள், முன்மண்டபச் சுவர்கள், தட்சிணுமூர்த்தி, விநாயகர், சந்திரசேகர் கோயில்களின் சுவர்கள், சுவாமி, அம்பிகைப்பிரகாரங்களின் மதிற்சுவர்கள் முதலியவற்றில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன.

இத்தலத்துக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இறைவனை, திருவெண்காடு தேவர், திருவெண்காடுடையார், திருவெண்காடுடைய நாயனுர், திருவெண்காட்டுப் பெருமாள் முதலிய பெயர்களால் அக்கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. தேவியை, ஸ்ரீ திருவெண்காடு தேவர் நம்பிராட்டியார், வேயனதோளி நாச்சியார், பெரியநாயகி என்ற பெயர்களால் குறிக்கின்றன. “வேயனதோள் உமை” என்று சம்பந்தர் இத்தலப்பதிகத்தில் கூறியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. பெரிய பிள்ளையார் என்று இத்தல விநாயகரான பெரிய வாரணப்பிள்ளையாரை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. இன்னும், தேவர்கள்நாயகப்பெருமான் (உற்சவர்), இடபவாகன தேவர், இடபவாகன தேவர் நம்பிராட்டியார், பிச்சதேவர், ஆடவல்லார், அர்த்தநாரிதேவர் இவர்களின் திருவுருவங்களைச் செய்து வைத்ததையும் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

கோசாலை (பசுமடம்), ஆதுலர்ச்சாலை (ஏழைகள் உணவு விடுதி), மடம், திருநந்தவனம் இவைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. கோயிலில் வளத்து வாழவிட்டான் சந்தி, குலசேகரத் தொண்டைமான் சந்தி, கலியுகராமன்சந்தி, அடையவளைந்தான்சந்தி, நாகரசன்சந்தி, மானங்காத்தான்சந்தி முதலியவை நடைபெறக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. விக்கிரமசோழன் திருவீதியில் மடம் கட்டியதாகவும், விக்கிரமசோழன் இந்த கோயிலுக்கு வந்து இறைவனை வணங்கி விக்கிரமசோழன் மண்டபத்தில் அமர்ந்திருந்தான் என்றும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இப்போது திருவெண்காட்டருகிலுள்ள பெருந்தோட்டம் என்னும் ஊரை அப்போது கலியுகக்கண்ண சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. திருவெண்காடன்நாழி, தேவர்கண்டியகக்கால் என்ற முகத்தலளவைகளைப் பயன்படுத்தியதாகவும் அறிகிறோம். திருவெண்காட்டுநங்கை என்ற பெயர் கல்வெட்டுக்களில் வருவது சிறுத்தொண்ட நாயனாரின் மனைவியாரை நினைவுபடுத்துகிறது.

இக்கோயிலுக்கு, தனிப்பட்டோர், பெண்கள் செல்வர், வணிகர், அரசாங்க அதிகாரிகள், பரிவாரத்தார், குதிரைவீரர், மன்னர் முதலியோர் தான தருமங்கள் செய்திருப்பதோடு அரசியார் பலரும் அறங்கள் புரிந்திருக்கின்றனர். இராஜராஜன் நம்பிராட்டியார் கூத்தன் வீரநாராயணியார், பராந்தகன் மாதேவியரான செம்பியன்மாதேவியார், திரைலோக்கியமுடையார், வானவன் மாதேவியார், நக்கன் கருக்கமந்தாள் பஞ்சவன் மாதேவியார், வில்லவன் மாதேவியார் முதலிய பேரரசிகளின் பெயர்கள் அக்கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றன. ஒரு அரசியார் நவரத்தினமாலை யொன்றை அம்பிகைக்கு சாத்தியருளக் கொடுத்தார். செம்பியன்மாதேவியார் வெள்ளி பொன் இவைகளால் நவரத்தினங்கள் பதித்த உருவம்

செய்து அளித்தார். இராஜவிந்தம், மாணிக்கம், பவளம், குப்பி, வைரம், மரகதம் முதலிய மணிகளின் பெயர்களும் அதில் குறிக்கப்படுகிறது.

நவரத்தினமாலை, பொன்கபாலம், பொன் வெள்ளி அணிகலன்கள், பொற்பூக்கள் முதலியவைகள் வழங்கியது, விளக்கெரிப்பதற்காக ஆடுகள், பொன், நிலம் முதலியவற்றை அளித்தது, கோயிலில் நாட்பூசை, சந்தி, மாத விழாக்கள் முதலியவை நடைபெற நிவந்தங்கள் ஏற்படுத்தியது என்பனபோன்ற செய்திகளையே பெரும்பாலும் அந்தக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மாத ஆயிலியவிழா, ஐப்பசித் திங்கள் சதயவிழா, மார்கழித் திருவிழா என்பவைகள் நடந்தன என்றும், திருவிழாக்களில் எழுந்தருளும் மூர்த்திகளுக்கு திருமுழுக்கு, பெருந்திருவமுது முதலியவை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும், இடபவாகன தேவர், நாயன்மார்கள் முதலிய மூர்த்திகளைக் காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறைக்கு எழுந்தருளச்செய்து திருமஞ்சனமாட்டப் பெற்றனர் என்றும், விழாக் காணவரும் அபூர்விகளுக்கு உணவளிக்கப்பட்ட தென்றும், வேதம் ஓதுபவர்களுக்கு நிலதானம் வழங்கப் பெற்றதென்றும், சிவத்துரோகம் செய்தவர்கள் நிலங்களைப் பறிமுதல் செய்யப்பட்ட தென்றும், இன்னும் பல அரிய செய்திகளையும் அவை அறிவிக்கின்றன.

திருவெண்காட்டுக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களைப்பற்றிப் பொதுவாக இதுவரை மேலே சொல்லப்பட்டது. அவைகள் ஒவ்வொன்றிலும் காணப்படுவவதைத் தெரிந்துகொள்ள விழைவோர்க்குப் பயன்படும் வண்ணம் கீழே விவரமாகக் கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தார் பதிவுசெய்த ஆண்டு, அறிக்கைகளில் அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட எண்கள், கோயிலில் எந்த இடத்தில் உள்ளது, எந்த அரசர் காலத்தது, ஒவ்வொன்றிலும் கூறப்பட்டுள்ளதன் சுருக்கம் முதலியவற்றையெல்லாம் கண்டுகொள்ளவும்.

1896-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 110-122 ஆகிய 13 கல்வெட்டுக்களை தென் இந்தியக் கல்வெட்டு V பகுதியில் 973—987 ஆக வெளியிடப்பெற்றிருக் கிறது. அவை பின்வருமாறு:—

**973**—சுவேதாரண்யர் கர்ப்பகக்கிரகத் தென்சுவர் —கிரந்தம்—குலோத்துங்க சோழன் I—மகாதேவன் என்ற அந்தணப் பேரறிஞர் திருநுந்தா விளக்கும், அதையெரிக்க நெய்க்காக நிலமும் அளித்தார்.

**974**—சுவேதாரண்யர் கர்ப்பக்கிரகத் தென்சுவர்— இராஜராஜ சோழன் I—அவன் அரசியார் சோழமா தேவியார் திருவெண்காடு தேவருக்குப் பொன்கபாலம் கொடுத்தார்.

**975**—ஷை யிடம்—இராஜராஜ சோழன் I-அவன் அரசியார் கூத்தன் வீரநாராயணியார், ஸ்ரீ திருவெண் காடுதேவர் நம்பிராட்டியாருக்குச் சாத்தியருளத் தந்தது மாணிக்கத்தின்நாண் இரண்டு.

**976**—ஷை மேற்குச் சுவர்—வீரராஜேந்திரன் II— அரசர் பிறந்தருளின ஆயிலியத் திருநாள்களில் திருவெண்காடுடையார் திங்கள்தோறும் திருமஞ்சன மாடி யருளித் திருவிழா எழுந்தருளுகைக்கும், பெருந் திருவமுது செய்தருளுகைக்கும் கிராமங்கள் நிவந்தங் களாகக் கொடுக்கப்பட்டது.

**977**—ஷை யிடம்—வீரராஜேந்திரன் II—(முடிவு பெருதது).

**978**—ஷை வடக்குச் சுவர்—இராஜாதிராஜன் I— இராஜேந்திரசிங்க வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர் திருவெண்காடுடையார் கோயிலில் துப்பயம் உத்தம சோழி எழுந்தருளிவித்த அர்த்தநாரி தேவர்க்கு வேண்டும் பூசைக்காக நிலம் இறையிலியாகவிட்டது.

**979**—ஷை யிடம் — இராஜராஜன் I — ஸ்ரீ திரு வெண்காடுடையார்க்கு அரசர் திருவவதாரம் செய் தருளின ஐப்பசித்திங்கள் சதயத் திருநாளன்று

திருமஞ்சனமாடவும், அதற்கு முன்பு ஆறுநாள் திருவிழாப் போதவும் நெல் வழங்கப்பெற்றது.

**980**—ஷை இடம்—இராஜராஜன் I—திரு நுந்தா விளக்கெரிக்கப் பொன்னும், இடபவாகனதேவர் நம்பிராட்டியாருக்கு சரதத்துடர் மூன்றும், இடப வாகன தேவர் திருமஞ்சனமாடி யருளும்போது ஸ்ரீ முடியில் வைக்கப் பொற்பூவும் வழங்கப்பெற்றன.

**981**—ஷை யிடம்—இராஜராஜன் I—அரசியார் வில்லவன் மாதேவியாரின் தாயார் நக்கன் உலோக சிந்தாமணியார் திருநுந்தாவிளக்கும், ஸ்ரீ ஹஸ்தம் செய்துசாத்தப் பொன்னும் வழங்கியது.

**982**—ஷை யிடம்—இராஜராஜன் I—அரசியார் தம்பிரானடிகள் வானவன்மாதேவியார்த்திரிபுவன மாதேவியார் விளக்கெரிக்க 96 ஆடுகள் கொடுத்தது.

**983**—இரண்டாம் பிரகாரம் வடசுவர்—குலோத் துங்கன் III—விளக்கெரிக்க நிலம் வழங்கியது.

**984**—ஷை யிடம்-திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜ ராஜன்-கோயிலுக்கு நிலம் விற்றது.

**985**—ஷை இடம்—கோமாறவர்மன் விக்கிரம பாண்டியன் திருவிளக்கெரிக்க நிலம் விட்டது.

**986**—ஷை மேற்குப் பிரகாரச் சுவர்-வாயிலுக்கு வலப்பக்கம்—விக்கிரமசோழன் (கி. பி. 1118—35)— "பூமாலை மிடைந்த பொன்மாலைதிகழ்தர பாமாலை யணிந்த" என்று தோடங்குகிறது. கோயிலுக்கு நில தானம் செய்தது.

**987**—ஷை சுவர்—வாயிலுக்கு இடப்பக்கம்-தமிழ், கிரந்தம்-விக்கிரமபாண்டியன்-திருவெண்காடுடையார்க் கும், வேயனதோளி நாச்சியார்க்கும் விக்கிரமபாண்டி யன் சந்திக்காக நிலம் வழங்கியது.

## அரசாங்கக் கல்வெட்டறிக்கை 1919

*[1918-ல் 442—521 எண்களாகப் படியெடுக்கப் பட்டவை.]*

### சுவேதாரண்யர் கர்ப்பக்கிரக வடசுவர்

**442**—இராஜராஜன்—அரசி வானவன்மாதேவியா ரான திரிபுவனமாதேவியார் விளக்குக்காக முப்பது கழஞ்சு பொன்கொடுத்தது.

**443**—ஷி-வடகரைநாங்கூர் நாட்டு திருவெண்கா டுடையதேவர் கோயிலுக்குப் பொன் வழங்கியது.

**444**—ஷி—மழவராயர்மகள், உத்தமசோழர்தாய், கண்டராதித்தரின் அரசியாரான பராந்தகன்மாதேவி யாரான செம்பியன்மாதேவியார் திருவுருவங்கள் எடுப் பித்து, அணிகலன்கள் பாத்திரங்கள் கொடுத்தது.

**445**—ஷி-கோயில் பூசனைக்காக குன்றம் என்ற ஊரினர் ஒருவர் பொருள் வழங்கியது.

**446**—இராஜாதிராஜன்—அரசி திரைலோக்கிய முடையார் தாய் அரையன் நம்பனங்கை கோயிலில் விளக்கெரிக்க ஆடுகள் வழங்கியது.

**447**—இராஜராஜன்—[மேலே 981-ல் கண்டது.]

**448**—இராஜேந்திரன் I—அரசன்தாய் திரிபுவன மாதேவியார் விளக்கெரிக்க ஆடுகள் தந்தது.

**449**—இராஜராஜன்—அரசி கூத்தன் வீரநாரணி யார் ஆடவல்லரர் பூசனைக்காகப் பொன் வழங்கியது.

### ஷி வட, மேல், தென்புறச் சுவர்கள்

**450**—இராஜாதிராஜன்—அமலன் செய்யவாயர் என்பார் பிச்சதேவர் திருவுருவம்செய்து, வெள்ளி பொன் அணிகலன்கள் அளித்து, பூசனைக்காக நிலமும் வழங்கியது. ஆதுலர்ச்சாலை யேற்படுத்தி அது நடை பெற நிலதானம் செய்தது.

**451**—ஷை-வெள்ளி பொன் ஆபரணங்களை மேலே சொல்லப்பட்டவர், பிச்சதேவருக்காகக் கொடுத்தது.

**ஷை மேற்கு தெற்குச் சுவர்கள்**

**452**—வீரராஜேந்திரன்—அரசன் திருநட்சத்திரத்தில் திங்கள்தோறும் விழா நடத்த சில ஊர்களின் வரித்தொகைகளைக் கோயிலுக்கு அளித்தது.

**453**—ஷை-பூசனை, வழிபாடு, திருவிழா, திருவமுது முதலியவற்றிற்குப் பொன் தானம்.

**ஷை தென்சுவர்**

**454**-இராஜராஜன்-அரசனுடைய பணியாளர்கள் செங்கழுநீர்த் திருவாசிகைக்குப் பொன்னும், பொற்பூக்களும் கொடுத்தது.

**455**—ஷை-மார்கழித் திருவிழாச் செலவுக்கு அரச அதிகாரிகள் பொருள் வழங்கியது.

**456**—ஷை—கோலக்காவன் என்பார் எடுப்பித்த இடபவாகன தேவர் படிமத்துக்கு அணிகலன்களும், பூசைக்காகப் பொருளும் கொடுத்தது.

**457**—ஷை—இராஜராஜ ஜனநாத தெரிஞ்ச பரிவாரம் என்ற அரசன் பணியாளர்கள் இடபவாகன தேவர்க்கு அம்பிகைச் செப்புருவம் செய்து கொடுத்தது.

**458**—ஷை—இராஜராதிராஜன் I—விளக்கெரிக்க ஆடுகள் வழங்கியது.

**459**—இராஜேந்திரன்-ஆத்துப்பள்ளிநியமம் என்ற ஊரினரான அரசனுடைய குதிரைவீரர் ஒருவர் பூசை, திருமஞ்சனம், திருவமுது இவைகளுக்காகப் பொருள் வழங்கியது.

**460**—ஷை—அரசன் தாயான திரிபுவனமாதேவியார் பொன் வழங்கியது.

**461**, **462** } ஷை—விளக்கெரிக்க ஆடுகள் கொடுத்தது.

**463**—ஷி—அரசியார் ஏவலர் ஒருவர் விளக்கெரிக்க ஆடுகள் கொடுத்தது.

**464**—ஷி—அரசி நக்கன் கருக்கமந்தாளான பஞ்சவன்மாதேவியார் தூபம் முதலியவற்றிற்குப் பொன் வழங்கியது.

மூலஸ்தானத்துக்கு வட பக்கத்தூண்

**465**—மதுரை கொண்ட பரகேசரிவர்மன்—திருவெண்காட்டுப் பெருமாள் கோயில் பூசைக்காக மலைநாட்டிலுள்ள கொடுங்கோளூர் வாசி ஒருவர் நிலம் வழங்கியது. அதில் **கோசாலை** (பசுமடம்) குறிக்கப் பெறுகிறது.

**466**—ஷி மற்றொரு தூண்-இராஜகேசரிவர்மன்-விளக்கெரிக்க ஆடுகள் கொடுத்தது.

முன்மண்டப வடசுவர்

**467**—திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்—வாணாதிராயர் என்பவர் கோயில் சந்திக்காக நிலக்கொடை புரிந்தது.

**468**—திரிபுவனச்சக்கரவர்த்தி—குலோத்துங்க சோழன்—கலியுகக்கண்ண சதுர்வேதி மங்கலச் சபையார் அவ்வூரிலுள்ள இராஜாதிராஜ சதுர்ச்சாலையில் கூடி கோயிலுக்கு நிலம் விற்பதை முடிவுசெய்தது.

**469**—இராஜகேசரிவர்மன் குலோத்துங்கன் — (மெய்க்கீர்த்தியும் கையெழுத்து செய்தோர் பேர்களுமே காணப்படுகிறது.)

ஷி மண்டப மேற்குச்சுவர்

**470**—இராஜேந்திரன்—கலியுகக் கண்ண சதுர்வேதிமங்கலச் சபையார் கோயிலில் எழுந்தருளியுள்ள **தேவர்கள்நாயகப் பெருமான்** பூசனைக்கும், நந்தவனத்துக்கும் நிலம் கொடுத்தது.

**471**—இராஜகேசரிவர்மன் திரிபுவனச்சக்கர வர்த்தி குலோத்துங்கன்—கோயில் நிலங்கள் சிலவற் றிற்கு வரி விதித்தது.

**472**—ஷை—(கிரந்தம், தமிழ்)—(சிறு பாகமே உள்ளது).

ஷை மண்டபம் கிழக்குச் சுவர்

**473**—விக்கிரம சோழன்—இராஜாதிராஜ வள நாட்டு அதியமங்கை நாட்டுப் பெருந்தோட்டத்து நிலத்தை விக்கிரமசோழன் திருவீதியில் அமைத்த திருமடத்திற்கு அளித்தது. கோயிலிலுள்ள விக்கிரம சோழன் திருமண்டபத்தின் படியில் அரசன் வீற் றிருந்ததைக் குறிக்கிறது.

தட்சிணாமூர்த்தி சந்நிதி மேல்சுவர்

**474**—மனுநீதிகண்டான் அகலங்கன் நாகரசர் என்பவர் நாகரசன் சந்திக்காக சர்வமானியம் அளித் தது.

**475**—(கிரந்தம்)—குலோத்துங்கன் - சுவேதாரண் யேசுவரர் கோயிலுக்கு நுந்தாவிளக்கை வியாசர் என்ற அந்தணர் தந்தது.

சந்திரசேகரர் சந்நிதி வடசுவர்

**476**—விஜயநகர—வீரவிருப்பண்ண உடையார்— திருவம்பலநல்லூர் அழிந்து கிடந்ததை மல்லரசர் என் பவர் சீர்திருத்திக் குடியேற்றி அதற்கு 'விருப்பரயன் பட்டினம்' என்று பெயர் கொடுத்து, அதன் வருவா யைத் திருவெண்காடுடைய நாயனர் கோயிலுக்கு அளித்தது.

விநாயகர் சந்நிதி வடசுவர்

**477**—இராஜராஜன்—குலோத்துங்கசோழ வள நாட்டு வேளநாட்டு இளஞ்சூரினர் ஒருவர் **பெரிய பிள்ளையார்** கோயிலில் விளக்கெரிக்கப் பொருளீந்தது.

**478**—ஷெ கோயில் மேற்குச் சுவர்—குலோத் துங்கன்—உலகுய்யக்கொண்ட சோழ சதுர்வேதிமங்க லம் என்ற ஊரினர் ஒருவர் நிலம் வாங்கிக் கோயில் பூசைக் களித்தது.

கிழக்கு உட்கோபுர வாயில் வலப்பக்கம்

**479**—இராசராசன்—நாங்கூரைச் சேர்ந்த ஒருவர் பொன் வழங்கியது.

**480**—திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்—இராசாதிராச வளநாட்டு வீரசோழ நல்லூரைக் கோயிலில் அடையவளைந்தான் சந்தி நடை பெறுவதற்காகத் தானமாக விடப்பட்டது. மழவ ராயர்தம்பி விசயகண்ட கோபாலன் என்று காணப் படுகிறது.

**481**—ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் — சந்தி, திருவிழா முதலியவை அரசன் பேரால் நடைபெறத் திருவெண்காட்டிலுள்ள நிலத்தைக் கோயிலுக்குக் கொடுத்தது.

**482**—வண்ணுடுடையார் மனைவி சேதிராயன் உத்தமசீலியார் திருவெண்காடு கோயிலில் விளக்கெரிப் பதற்காக 25 கழஞ்சு பொன் கொடுத்தது.

**483**—கோயிலில் விளக்கெரிக்க 25 கழஞ்சு பொன் கொடுத்தது.

**484**—கோயிலுக்கு விளக்கு தானம் செய்தது.

**485**—ஆரூரன் அம்பலத்தாடிகள் என்ற பெண் கோயிலில் விளக்கெரிக்க 90 ஆடுகள் கொடுத்தது.

**486**—உத்தமசோழனின் அரசி விளக்கெரிக்க நில தானம் செய்தது.

கிழக்கு உட்கோபுர வாயில் இடப்பக்கம்

**487**—பாண்டியன் ஸ்ரீவல்லபதேவன்—கோயிலில் மானங்காத்தான் சந்தி என்பதைச் செய்வதற்காக

பிச்சன் மழவராயர் என்பவர் வீரநாராயண நலலூர் முதலிய ஊர்களில் நிலம் வழங்கியது.

**488**—ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் — தொண்டைமானூர் என்பவர் கோயிலில் வளத்து வாழ விட்டான் சந்தி என்ற ஒன்றை நிகழ்த்துவதற்காக இரண்டு வேலி நிலத்தையும் வரித்தொகையும் வழங்கியது.

**489**—இராஜராஜன் — மேள வாத்தியக்காரர் களுக்கு நிலம் கொடுத்தது.

**490**—மேற்கானாட்டு அதிராய மாங்கல்யபுரத்து வணிகர் ஒருவர் திருவெண்காடு தேவர் பூசனைக்காக 25 கழஞ்சு பொன் வழங்கியது.

**491**—பார்த்திசேகரத்தெரிஞ்சகைக்கோளர் என்ற வகுப்பினருள் ஒருவர் பூசைக்காக நிலம் வாங்கிக் கொடுத்தது.

### கிழக்கு இராஜகோபுரவாயில் வலப்பக்கம்

**492**—விக்கிரம பாண்டியன் — இந்த கோபுர வாயில் "விக்கிரம பாண்டியன் திருவாசல்" என்றழைக் கப்படுகிறது.

**493**—விஜயநகர வீரப்பிரதாப கிருஷ்ணதேவ ராயர்—சுவேதாரண்யர் கோயிலுக்கு அரசர் சில வருவாய்களைக் கொடுத்தது.

### மேற்கு உட்கோபுரவாயில் வலப்பக்கம்

**494**—பாண்டியன் ஸ்ரீவல்லபதேவன் — கோயி லுக்கு நிலதானம் அளித்தது.

**495**—**ஷை வாயில் இடது பக்கம்** — ஒருகைக்கோளர் கோயிலுக்கு பொன்னுபரணங்கள் கொடுத்தது. கோயில் நிலத்தைத் திருத்தி அதிகமான குத்தகைக்கு விட்டது.

**496**—(கிரந்தம்) — சுவேதவனத்துக்கோயிலில நான்கு விளக்குகள் எரிக்க ஆடுகள் கொடுத்தது.

**497**—நந்தவனம் வைத்துக் காப்பாற்ற ஏற்பாடு செய்தது.

**498**—கோனேரின்மை கொண்டான்—கோயிலில் சந்தி ஒன்று நடைபெறக் குலசேகரத் தொண்டைமானுர் என்பவர் நிலம் வழங்கியது.

**499**—இராசராசன் I—விளக்கெரிக்க ஆடுகள் வழங்கியது.

### மேற்கு இராஜகோபுரவாயில் வலதுபக்கம்

**500**—திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கன்—விளக்கெரிக்க ஆடுகள் வழங்கியது.

**501**—**ஷை கோபுரவாயில் இடப்பக்கம்**-(கிரந்தம்)-சேது வாதவூர், சிதம்பரம், கோகரணம், பம்பாபுரி, **சுவேதாரண்யம்**, வடாடவி, சோணுத்திரி, காஞ்சி, ஸ்ரீகிரி, காளத்தி, நகரி, கேதாரி, வாரணுசி, கைலாசம் இவைகள் முத்தித்தலங்கள் எனக் கூறப்பட்டிருக்கிறது.

### முதற்பிரகாரம் வடசுவர்

**502**—இராசராசன்—கோயில் நிலங்களைத் திருத்தி உழவு செய்ய சிலர் பொருள்நன்கொடை அளித்தது, கோயிலில் விளக்கெரிக்கவும், **தேவர்கணுயகப்பெருமான்** திருவீதிவலம் வரும்போது வேதம் ஓதுவதற்கும், கோயிலில் அபூர்விகளுக்கு உணவளிக்கவும் ஆகும் செலவுகளைக் கொடுக்க இசைந்ததும், அந்த நிலங்களுக்கு ஏற்பட்ட வரி கொடுக்க ஒப்புக்கொண்டது.

**503**—ஷை நடுவில் நாடு என்ற இராசராச வளநாட்டு வடகரைவேசலிப் பாடித் தனியூரான வாகூர் என்ற அழகிய சோழ சதுர்வேதி மங்கலத்துவாசி

ஒருவர் திருநெல்வாயிலில் நிலம் வாங்கிக் கோயிலில் விளக்கெரிப்பதற்காகத் தானம் செய்தது.

**504**—இராசராசன் — "சீர்மன்னு மலர்மகள்" என்று தொடங்குகிறது. மாத்தூர் பெரியதனக்கார ரான சோழக்கோனார் என்கிற அரயன் உடையான் சேதியன்மகளும், இராசேந்திர சோழவளநாட்டுச் சேந்தமங்கலத்தைச் சார்ந்த தாயினுநல்லபெருமாள் என்ற இளங்கோவேளார் மனைவியும் ஆன **திருவெண் காட்டு நாச்சியார்** நன்மைக்காக விளக்கெரிக்க, திருப் பனங்காடு கிராமத்தில் நிலம் விலைக்கு வாங்கிக் கொடுத்தது.

**505**—பரகேசரி திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத் துங்கன் ஐயங்கொண்ட சோழ மண்டலத்துக்குலோத் துங்கசோழவளநாடான புலியூர்க்கோட்டத்துக் குன் றத்தூர் நாட்டுக் குன்றத்தூரினர் ஒருவர் விளக்கெரிக்க நிலம் விலைக்கு வாங்கி யளித்தது. 'புயல்வாய்த்து மண் வளர' என்று இக்கல்வெட்டு தொடங்குகிறது.

### முதற்பிரகாரம் மேற்குச் சுவர்

**506**—கோனேரின்மை கொண்டான் — கோயில் நிலங்களை வைத்திருந்த மூவர் சிவத்துரோகிகளாய் விட்டபடியால் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவைகளின் வருவாயை நெல்லாகவும் பணமாகவும் கோயிலுக்குக் கொடுக்க உத்திரவிடப்பட்டது. அர சாங்கத் திருமந்திர ஓலைநாயகம் (Royal Secretary) நெறியுடைச் சோழ மூவேந்த வேளான் என்று தெரி விக்கிறது.

**507**—கோனேரின்மை கொண்டான் — ஐயங் கொண்ட சோழவளநாட்டுப் பிரமதேயமான தலைச் சாங்காட்டின் உட்கிடையான இராசராச நல்லூர் நிலத்தை பூசை, திருவிழா, திருவீதிவலம் இவைகளின் செலவுக்காக விடப்பட்டது.



புதன்



அர்த்தநாரீசுவரர்

(அண்மையில் கோயிலுக்குள் பூமிக்கடியிலிருந்து கண்டெடுக்கப்பெற்றவை)

**508**—விக்கிரமசோழன் — 'பூமாதுபுணர' என்ற தொடக்கம். பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) திருச்சிற்றம்பலமுடையார் கோயிலுக்கு நந்தவனத்திற்காக நாங்கூர்நாட்டுப் பிரமதேயமான இருக்கையூரின் வரித்தொகையை ஷ ஊர்ச்சபையார் தள்ளிக் கொடுத்தது. திருவெண்காடுடையார் கோயிலில் இக்கல்வெட்டு பொறிக்க உத்திரவிடப்பட்டது.

**509**—மாறவர்மன் பராக்கிரம பாண்டியன்—[தேதி முதலிய விவரங்கள் மாத்திரம் காணப்படுகின்றன]

**510**—கோனேரின்மை கொண்டான்—வைத்தியச் சக்கரவர்த்தி யென்பவர் அரசன் பெயரால் கட்டிய வீரபாண்டீசுவரமுடைய நாயனர் கோயிலில் வேதம் ஓதும் பிராமணர்களுக்கு வீடுகளும் நிலமும், நந்தவனம் ஏற்படுத்தவும், பூசை வழிபாடுகளுக்காக நிலமும் வழங்கப்பட்டன. அம்பிகையின் பெயர் **வேயன தோளிநாச்சியார்** என்று குறிக்கப்பெற்றிருக்கிறது.

**511**—ஷ அரசன் பெயரால் ஏற்பட்ட கலியுகராமன் சந்தி பூசனை புரியவும், காவிரி கடலொடு கலக்குமிடத்தில் இறைவனையும் நாயன்மார்களையும் திருமஞ்சனமாட்டவும் நிலம் வழங்கப்பட்டது.

**512**—பரகேசரி திரிபுவன வீரதேவன் இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பை நாட்டிலுள்ள குலோத்துங்க சோழ சதுர்வேதி மங்கலத்தினர் ஒருவர் நிலம் விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்தது.

### முதற்பிரகாரம் தெற்குச்சுவர்

**513**—கோனேரின்மை கொண்டான் - அரசாங்க அதிகாரியான பல்லவராயர் கேட்டுக்கொண்டபடி அபிமுத்தீசுவரமங்கலம் என்ற ஊர் கோயிலுக்கு விடப்பட்டது.

**514**—பாண்டியன் ஸ்ரீவல்லபதேவன்—காவிரிக்கு வடகரையில் கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்த கன்னடியர்களுடன் கோப்பெருஞ்சிங்கன் போர் செய்யத் தொடங்கியது முதல் நின்றுபோன திருவிழாக்களை மறுபடியும் நடத்த அரச அதிகாரி தொண்டைமானுர் ஆணையிட்டது. இவர் இவ்வரசன் காலத்திலும் சுந்தர பாண்டியன் காலத்திலும் இருந்தவர்.

### முதற்பிரகாரம் கிழக்குச் சுவர்

**515**—திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கன்—ஜயங்கொண்ட சோழமண்டலம் மணவில் கோட்டத்துப் பாசலி நாட்டுப் பாசலி என்ற ஊரினர் ஒருவர் திருவாலிநாட்டுக் குலோத்துங்க சோழன் பாசலி என்ற பெயரால் நிலம் வழங்கியது.

**516**—இராசகேசரி குலோத்துங்கன் —'பூமன்னு பாவை' என்ற தொடக்கம். விளக்கெரிக்க நிலம்விடப் பட்டது.

**517**—விக்கிரமசோழன் — விசயராசேந்திர சதுர்வேதி மங்கலத்துப் பிராமணப் பெண் கோயிலில் விளக்கெரிப்பதற்கா நிலம் அளித்தது.

**518**—ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் — கய மாணிக்க வளநாட்டுப்பட்டினக் கூற்றத்துப் பெருவனூரினர் ஒருவர் விளக்கெரிக்க நிலம் விலைக்கு வாங்கிக் கொடுத்தது. திருப்பத்தூர் என்ற இடத்தில் காவிரி உடைப்பைக் கூறுகிறது.

**519**—திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கன்—குன்றத்தூரினர் ஒருவர் நிலம் விலைக்கு வாங்கிக் கோயிலில் விளக்கெரிப்பதற்காகக் கொடுத்தது; தரிசாய்க் கிடந்த நிலத்தை உழவு செய்யத் தகுதியாக்க அவரே பொருள் உதவியது.

**520**—பரகேசரி குலோத்துங்கன்—புலியூர்க்கோட்டத்து ஆலம்பாக்கம் என்ற ஊரினர் ஒருவர் நெல்

Q23:38.21193-TV
N142-5



வாயில் என்ற ஊரில் நிலம் விலைக்கு வாங்கிக் கோயிலில் விளக்கெரிப்பதற்காக அளித்தது.

அம்பாள் கோயில் முதற்பிரகார மேற்குச் சுவர்

**521**—தஞ்சை மகாராட்டிர மன்னர் துக்கோஜி—பெரியநாயகி கோயில் மதிற்சுவர்களைத் தண்டாயுத பண்டாரம் என்பவர் கட்டியது.

## 12. நித்திய பூசை

இக்கோயிலில் நாள்தோறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. அவை,

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருப்பள்ளி எழுச்சி | காலை | 7 | மணி |
| 2. | காலசந்தி | ,, | $8\frac{1}{2}$-10 | ,, |
| 3. | உச்சிக்காலம் | ,, | 12 | ,, |
| 4. | சாயரட்சை | இரவு | $6\frac{1}{2}$ | ,, |
| 5. | இரண்டாங் காலம் | ,, | $8\frac{1}{2}$ | ,, |
| 6. | அர்த்தஜாமம் | ,, | 9 | ,, |

10998 MADRAS

## 13. திருவிழாக்கள்

ஆண்டுதோறும் மாசித் திங்களில் சுவேதாரண்யேசுவரருக்கு இந்திரப் பெருவிழா நடைபெற்று வருகிறது.

இத்தலத்தில் 12 மாதங்களும் விழாக்கள் நடைபெறுகின்றன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு :

1. **சித்திரை** :—இடபவாகனக்காட்சி, திருவோண நட்சத்திரத்தில் ஸ்ரீ நடராசர் அபிஷேகம்.

2. **வைகாசி** :—அமாவாசையில் சிவப்பிரியர் மணிகர்ணிகையில் தீர்த்தமாடுதல். வெள்ளை யானைக்குத் துர்வாச முனிவரால் ஏற்பட்ட சாப விமோசனம்.

3. **ஆனி** :—உத்திரத்தில் ஆனித்திருமஞ்சனமும், ஸ்ரீ நடராசர் தெரிசனமும்.

4. **ஆடி** : பட்டினத்தடிகள் சிவபூசார்த்தமாகத் திருவெண்காட்டிற்கு எழுந்தருளுதலும், சிவபெருமான் பிட்சாடனர் ரூபமாக எழுந்தருளி மணிகர்ணிகையில் தீர்த்தம் கொடுத்தலும், சிவபூசை செய்வித்தலும், இரவு இடபவாகனரூடராய்க் காட்சியளித்தலும் நடைபெறும். ஸ்ரீ பிர்மவித்யாம்பாளுக்கு ஆடிப்பூர விழா பத்து நாள் நிகழும். ஆடி அமாவாசையில் சங்கம தீர்த்தச் சிறப்பு.

5. **ஆவணி**:—சுக்கிலபட்சம் சதுர்த்தசியில் ஸ்ரீ நடராசர் அபிஷேகம். கோகிலாஷ்டமி பெருமாள் சேவை. விநாயக சதுர்த்தி. ஆவணி மூலம் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளல்.

6. **புரட்டாசி**:—சுக்கிலபடசம் சதுர்த்தசி ஸ்ரீ நடராசர் அபிஷேகம். நிறைமணி, தேவேந்திர பூசை, நவராத்திரி விழா 9 நாட்கள். விசயதசமியன்று மணி கர்ணிகை தீர்த்தக் கரையில் அம்புபோட குதிரை வாகனத்தில் சுவாமி புறப்பாடு செய்யப்படும். ஒவ்வொருநாளும் இசையரங்குகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறும். அலங்காரங்கள் சிறப்பாக நடைபெறும். மூலஸ்தானத்திற்கு இலட்சார்ச்சனை முதல்நாள் ஆரம்பித்து 10-வது நாள் பூர்த்தி.

7. **ஐப்பசி**: தீபாவளி அசுவதியில், அன்னாபிஷேகம், சுக்கிலபட்சம் பிரதமையில் கந்தர்சஷ்டி விழா. 6-ஆம் நாள் சஷ்டியில் சூரசம்காரம். மறுநாள் விடையாத்தி விழா.

8. **கார்த்திகை**: ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 2-ஆவது காலத்தில் ஸ்ரீ அகோரமூர்த்திக்கு உபயக்காரர்களின் அபிஷேகமும் பூசையும், 3-ஆவது ஞாயிறன்று மகா ருத்ராபிஷேகமும், விபூதி அலங்காரமும் சிறப்பாக நடைபெறும். ஒவ்வொரு கார்த்திகைச்

சோமவாரத்திலும் சுவேதனப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம்; இந்திர விமானக்காட்சி; பரணி தீபம்; மறுதினம் திருக்கார்த்திகை விழா.

9. **மார்கழி:** தனுர்மாச பூசை. சதய நட்சத்திரத்தில் மாணிக்கவாசகர் விழா. அன்றுமுதல் சுவாமி அம்பாளுக்கு டோலோற்சவம். 10-ஆம் நாள் திருவாதிரையில் ஸ்ரீ நடராசர் தெரிசனம். சுவாமி அம்பாள் வீதிவலம் வருதல்.

10. **தை:** சங்கராந்தி மறுநாள் அம்பாள் கனுகுளிக்க மணிகர்ணிகைக்குப் போய்வருவதும், மாலை சுவாமி குதிரை வாகனத்தில் எழுந்தருளி பாரிவேட்டைக்குப் போய்வருவதும் நடைபெறும். மகாசாஸ்த்தா விழா 10-ஆம் நாள். மகாகாளிக்கு விழா 10-ஆம் நாள்.

11. **மாசி: இந்திரப் பெருவிழா.** சுக்கிலபட்சம் துவாதசி புனர்பூசத்தில் கொடியேற்றம்.

3-ஆம் திருநாள்: சுவேதகேது என்பவர் சிவபெருமானை வழிபட்டு வருங்கால் அன்று எட்டாவது வயது முடியும் நாள். இயமன் வந்து பாசத்தைப் பூட்டுதலும் சிவபெருமான் இயமனை எரித்தலும் மீட்டும் அருளலும்.

4-ஆம் திருநாள்: மகம் பௌர்ணமி திதியின் காவிரி சங்கம தீர்த்தம்.

5-ஆம் திருநாள்: பூரநட்சத்திரம் ஸ்ரீ அகோரமூர்த்தி எழுந்தருளுதலும், மருத்துவாசுர சங்காரமும், இடபவாகனக் காட்சியும்.

7-ஆம் திருநாள்: திருக்கல்யாணமும், புட்பப் பல்லக்கு சேவையும்.

8-ஆம் திருநாள்: பிட்சாடனர் விழா.

9-ஆம் திருநாள்: திருத்தேர்.

10-ஆம் திருநாள்: காலை ஸ்ரீ நடராசப்பெருமான் வீதி உலா காட்சியும், முக்குள தீர்த்தம் கொடுத்தலும். சஷ்டி—விசாகத்தில் பஞ்சமூர்த்திகள் இடப வாகன ரூடராய் மணிகர்ணிகை நதியில் தீர்த்தம் கொடுத்தல்.

11-ஆம் திருநாள்: ஏகாந்த சேவை.

12-ஆம் திருநாள்: சந்திர புட்கரணியில் தெப்ப விழா.

12. **பங்குனி:** சுக்கிலபட்சம் பிரதமையில் ஸ்ரீ அகோரமூர்த்திக்கு இலட்சார்ச்சனை ஆரம்பம். பௌர்ணமி திதி பங்குனி உத்திரத்தில் பூர்த்தி. அன்று 1008 சங்காபிஷேகமும், இடபவாகனக் காட்சியும். மறுதினம் விடையாத்தி விழா. இலட்சார்ச்சனை ஒவ்வொரு தினமும் அன்பர்களின் உபயங்களாக நடந்து வருகிறது.

நடராசமூர்த்திக்குச் சிதம்பரத்தைப்போல ஆறு அபிஷேகங்களும், ஆனித் திருமஞ்சனமும், மார்கழித் திருவாதிரையும் சிறப்பாக நடைபெறுகின்றன. அகோரமூர்த்திக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் நாடோறும் காலசந்தியில் மட்டும் நடக்கும் அபிஷேகம் தவிர இரண்டாங் காலத்திலும் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் உள்ளன. இதனை **அகோரபூஜை** என்று மக்கள் வழங்குகின்றார்கள். இது இத்தலத்திற்குரிய தனிச்சிறப்பாகும். இவ்வுற்சவங்களைப் பெரும்பாலும் தேவஸ்தான வருவாயிலிருந்தே மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். மாசித்திங்களில் நடைபெறும் இந்திரமகோற்சவத்தை இந்திரனே வந்திருந்து நடத்துவதாக ஐதீகம். இது திருவெண்காட்டுக்கு அண்மையிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் பழங்காலத்தே இந்திரவிழா நடந்ததாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதை நினைவூட்டுகிறது.

## 14. நிர்வாகம்

இந்த தேவஸ்தானம் சென்னை அறநிலைய ஆட்சித் துறையின் மேற்பார்வைக்குட்பட்டது. 1932-ல் இதன் நிர்வாகம் நடைபெறுவதற்காக ஒரு திட்டம் வகுக்கப் பெற்றது. இப்போது ஒரு அறங்காவலர் குழுத்தலைவரும், இரண்டு உறுப்பினர்களும் இருக்கின்றனர். அரசாங்க அலுவலரான ஒரு இறைபணியாளரும் உள்ளனர். கோயிலுக்குள்ளே தேவஸ்தான அலுவலகம் இருக்கிறது.

**சமயப்பணி :** இந்திரமகோற்சவம், நவராத்திரி உற்சவம் போன்ற திருவிழாக்களிலும், மற்றைய சிறப்பு நாட்களிலும் நூற்றுக்கால் மண்டபத்தில் இன்னிசை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. சிவாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்பு ஒன்றை தேவஸ்தானம் தன் சொந்த செலவில் நடத்தி வைத்தது. அதில் பல ஆலய அர்ச்சகர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுர்கள். இத்தலப் பெருமையை மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு தல வரலாற்றைத் தேவஸ்தானம் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் நான்கு பதிப்பிட்டுச் செலவாகிவிட்டன. இப்போது இந்த ஐந்தாம் பதிப்பு விரிவான முறையில் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும், வண்ணப் படங்களுடனும் வெளிவருகின்றது.

**ஸ்ரீ மெய்கண்டார் தேவாரப் பாடசாலை :** தேவஸ்தானம் ஒரு தேவாரப் பாடசாலை வைத்து நடத்துகிறது. ஒரு தேவார ஆசிரியரும், பதினெரு மாணவர்களும் இருக்கின்றனர். அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் இவை இலவசமாக வழங்கப்படுகின்றன. நாள்தோறும் நடராசர் சந்நிதியில் இன்னிசைக் கருவிகளுடன் தேவார பாராயணம் செய்கின்றனர். திருவிழாக் காலங்களிலும் வீதியுலாவில் பணிபுரிந்தும் வருகின்றனர்.

**ஸ்ரீ மெய்கண்டார் துவக்கப் பள்ளி:** தேவஸ்தான ஆட்சியின்கீழ் ஒரு துவக்கப் பள்ளி நடத்தப்பெற்று வருகிறது. 150 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். 5 ஆசிரியர்கள் உள்ளனர். பள்ளியில் படிக்கும் 50 ஏழைக் குழந்தைகளுக்கு நடுப்பகல் உணவு தேவஸ் தானச் செலவிலேயே அளிக்கப்பட்டுவருகிறது.

**நூல்நிலையம்:** தேவஸ்தானம் ஒரு நூல் நிலையத் தையும் கோயிலுக்குள்ளே வைத்திருக்கிறது. அதில் சமய, இலக்கிய நூல்கள் 355 இருக்கின்றன.

**தோட்டங்கள்:** கோயிலுக்குள்ளேயே மூன்று தீர்த்தக் கரைகளின் பக்கத்தில் மூன்று நந்தவனங் களில் பலவகை பூச்செடிகள் வைத்துக் காப்பாற்றப் படுகின்றன. கோயிலுக்கு நாள்தோறும் தேவைப் படும் மலர்கள் அவைகளில் கிடைக்கின்றன. இவற்றை யன்றி கோயிலுக்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலத்தில் சவுக்கு, தென்னை, மா, பலா, தேக்கு, வாழை, மூங்கில், கொய்யா, புளி, நெல்லி, மூங்கில், நாவல், விளா, முந்திரி முதலிய பலன் தரும் மரங்கள் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. சவுக்கு மூன்று இலட்சம், தென்னை 5500, மா 1000, தேக்கு 884, பலா 527, முந்திரி, 260, கொய்யா 104 முதலியவைகள் இருக் கின்றன.

**சுற்றுக்கோயில்கள்:** இத்தலத்தில் கீழ்ச்சந்நிதித் தெருவில் இந்திர விநாயகர் கோயிலும், தேரோடும் வீதிகளின் நான்கு மூலைகளிலும் நான்கு விநாயகர் கோயில்களும், தென்மேற்கு மூலைக்குச் சிறிது தெற்கில் விலங்குதறித்த விநாயகர் கோயிலும், அதற்கு மேற்கே மாரியம்மன் கோயிலும், வடக்கு வீதியில் பிடாரிகோயி லும், மேலச்சந்நிதியில் ஐயனர் கோயிலும் இருக் கின்றன. இவைகளின் நித்திய பூசை, திருவிழாக்கள் முதலியன தேவஸ்தான ஆதரவுகொண்டே நடை பெறுகின்றன.



திருக்கல்யாணமண்டபம்

## 15. திருப்பணிகள்

திருவெண்காட்டுக்கோயிலில் முதலாம் இராச ராசசோழன் (கி. பி. 985-1014) காலத்திய கல்வெட்டு காணப்படுவதால் இக்கோயில் இற்றைக்கு ஏறக் குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்பதற்கு ஐயமில்லை. கோயிலைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் அழகிய திருமதில்கள் இருக்கின்றன. அவைகளில் திக்குப்பாலகர்களின் படிமங்கள் உள்ளன. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள இரண்டு இராச கோபுரங்களும், உட்கோபுரங்களும் அழகிய சுதை உருவங்கள் நிறைந் தவை. மூலஸ்தான விமானம் முழுவதும் கருங்கல் லால் ஆனது. திருவெண்காட்டீசர் கர்ப்பக்கிரகத் தென்சுவரில் வெள்ளையானை வழிபட்டதைச் சிற்ப மாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. அகோரமூர்த்தி (மூலவர்), பத்திரகாளி, துர்க்கை, முதலியவர்களின் திருவுருவச்சிலைகள் மிகவும் அற்புதமான சிற்பவேலைப் பாடமைந்தவை. இங்குள்ள தென்முகக் கடவுள் (மேதா தட்சிணாமூர்த்தி) ஏனைய இடங்களிலிருப்பது போல் சனகாதி நால்வர்களுக்கு உபதேசம் இல்லை; பிரமனுக்கு உபதேசம் செய்வதான காட்சி காணத் தகுந்தது.

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண் டான் என்ற பாண்டியமன்னன் காலத்தில் வைத்தியச் சக்கரவர்த்தி யென்பார் அரசன் பெயரால் **வீரபாண்டீசு வரமுடையார்** கோயிலும், **வேயனதோளி நாச்சியார்** கோயி லும் கட்டியதாக ஒரு கல்வெட்டு குறிக்கிறது. விக்கிரம சோழன் என்ற அரசன் இக்கோயிலுக்கு வந்து 'விக் கிரமசோழன் மண்டபத்தில்' அமர்ந்திருந்ததாக ஒரு கல்வெட்டு குறிப்பதால் அம்மண்டபம் அவன் காலத்தே கட்டப்பட்டிருக்கவேண்டும். தஞ்சை மகா ராட்டிர மன்னர் துக்கோஜி காலத்தில் கி. பி. 1730-ல் தண்டாயுத பண்டாரம் என்பவரால் பெரியநாயகி

அம்மன் கோயிலின் மதிற்சுவர்கள் கட்டப்பெற்றதாக அக்கோயிற் பிரகாரச் சுவர்க் கல்வெட்டு ஒன்ருல் தெரியவருகிறது. தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களுள் ஒருவரான வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளால் இக்கோயிலிலுள்ள நடராச சபை கட்டப்பெற்றதாக அவருடைய வரலாற்றிலிருந்து தெரிகிறது.


1937-ஆம் ஆண்டில், தேவகோட்டை திருவாளர் மு. இராம சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களால் பெரியநாயகியம்மனின் கோயில் திருப்பணி தொடங்கப்பெற்று, அவர்களுடைய குமாரர்கள் திருவாளர்கள்-வெங்கடாசலம் செட்டியார், சுவாமிநாதன் செட்டியார் இருவர்களாலும் அக்கோயில் முழுமையும் கருங்கல் திருப்பணியாகச் செய்து, 1940-ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகமும் நடத்தப்பெற்றது. சுவாமிகோயில், விமானங்கள், மண்டபங்கள் முதலியனவும் புதுப்பிக்கப்பட்டுத் திருப்பணி செய்யப் பெற்றது.

இப்போதிருக்கும் கோயில் தருமகர்த்தக் குழுவினரின் பெருமுயற்சியால் மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் கோயிலில் பல சிறந்த திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன. சுவாமி சந்நிதி உட்கோபுரத்தின் முகப்பில் 26,000 ரூபாய் செலவில் **திருக்கல்யாண மண்டபம்** கட்டப்பெற்றிருக்கிறது. வடக்குத் திருமாளிகைப் பத்தியில் ஒரு சிறுமண்டபத்தில் அகோரமூர்த்தி (உற்சவர்) இப்போது எழுந்தருளியுள்ளார். அதே பத்தியில் இப்போது புதிய பெரிய மண்டபம் 55,000 செலவில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இன்னும் அக்கினி தீர்த்தக் கரையில் மெய்கண்டாருக்கென ஒரு தனிக்கோயில் புதிதாக எழுப்பப்பெற்றுள்ளது. இவைகள், மண்டபங்கள், விமானங்கள், மதில்கள், உட்கோபுரங்கள் முதலியவற்றிற்கு வண்ணங்கள் பூசி ஓவியங்களும் தீட்டப் பெற்றிருக்கின்றன. சுவாமி சந்நிதியின் முன்

மண்டபத்தில் ஓவியமாகவுள்ள "ஆனந்த தாண்டவக் காட்சி" கண்கவர்வனப்பினதாக இருக்கிறது. இந்தத் திருப்பணிகள் எல்லாம் நடந்ததற்குச் சிகரமாக சார்வரி,பங்குனி, 13–ஆம் நாள்(26-3-1961) ஞாயிற்றுக் கிழமையன்று பெருஞ் சிறப்புடன் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அந்த நன்னாளிலே இந்ததலவர லாற்றின் ஐந்தாம் பதிப்பு வெளிவருவது திருவெண் காட்டீசன் திருவருளேயாகும்.

வெண்காடு மேவிய விமலனடி வாழ்க.

—○—



# 16. தலப்பாடல்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

### 1 *பண்—சீகாமரம்*

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. 2

மண்ணொடுநீர் அனல்காலோ டாகாயம் மதியிரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார் என்றடர அஞ்சுவரே. 5

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தான் உறைகோயில்
பண்மொழியா லவன்நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானும் அடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம்நன் குடையானும் முக்கணுடை யிறையவனே. 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம்நெரித்தன் றருள்செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே. 8

கள்ளார்செங் கமலத்தான் கடற்கிடந்தான் எனஇவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்தாழ்ந்தும் உணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யும் மேதகுவெண் காட்டானென்
றுள்ளாடி யுருகாதார் உணர்வுடைமை யுணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்கள் அவர்பிரிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண் காட்டானென்
றோதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே. 10

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## 2 பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்தா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே. 1

நாதன் நம்மை ஆள்வா னென்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கள்மேல்
ஏதந் தீர இருந்தான் வாழும் ஊர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே. 2

தண்முத் தரும்பத் தடமூன் றுடையான் தனையுன்னிக்
கண்முத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள்
உண்முத் தரும்ப உவகை தருவான் ஊர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும் வெண்காடே. 3

நரையார் வந்து நாளுங் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா உள்கு வார்கள் உள்ளத்தே
கரையா வண்ணங் கண்டான் மேவும் ஊர்போலும்
விரையார் கமலத் தன்னம் மருவும் வெண்காடே. 4

பிள்ளைப் பிறையும் புனலுஞ் சூடும் பெம்மானென்
துள்ளத் துள்ளித் தொழுவார் தங்கள் உறுநோய்கள்
தள்ளிப் போக அருளுந் தலைவன் ஊர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித் திரியும் வெண்காடே. 5

ஒளிகொள் மேனி யுடையாய் உம்ப ராளீயென்
றளிய ராகி யழுதுற் றூறும் அடியார்கட்
கெளியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
வெளிய உருவத் தானை வணங்கும் வெண்காடே. 6

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்த மாணிக்காய்
ஆள்வித் தமரர் உலகம் அளிப்பான் ஊர்போலும்
வேள்விப் புகையால் வானம் இருள்கூர் வெண்காடே. 7

வளையார் முன்கை மலையாள் வெருவ வரையூன்றி
முளையார் மதியஞ் சூடி யென்று முப்போதும்
இளையா தேத்த இருந்தான் எந்தை ஊர்போலும்
விளையார் கழனிப் பழனஞ் சூழ்ந்த வெண்காடே. 8

கரியா னோடு கமல மலரான் காணாமை
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான் என்பார்கட்
குரியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே. 9

பாடும் அடியார் பலருங் கூடிப் பரிந்தேத்த
ஆடும் அரவம் அசைத்த பெருமான் அறிவின்றி
மூடம் உடைய சமண்சாக் கியர்கள் உணராத
வேடம் உடைய பெருமான் பதியாம் வெண்காடே. 10

விடையார் கொடியான் மேவி உறையும் வெண்காட்டைக்
கடையார் மாடங் கலந்து தோன்றுங் காழியான்
நடையார் இன்சொல் ஞானசம் பந்தன் தமிழ்வல்லார்க்
கடையா வினைகள் அமர லோகம் ஆள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## 3 பண்—காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

மந்திரம் மறையவை வானவ ரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்இறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமும் முதலுடை அடிக ளல்லரே. 1

படையுடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவணம் உகந்த கொள்கையர்
விடையுடைக் கொடியர்வெண் காடு மேவிய
சடையிடைப் புனல்வைத்த சதுர ரல்லரே. 2

பாலொடு நெய்தயிர் பலவு மாடுவர்
தோலொடு நூலிழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண் காடு மேவிய
ஆலம தமர்ந்தஎம் அடிக ளல்லரே. 3

ஞாழலுஞ் செருந்தியும் நறுமலர்ப் புன்னையுங்
தாழைவெண் குருகயல் தயங்கு கானலில்
வேழம துரித்தவெண் காடு மேவிய
யாழின திசையுடை யிறைவ ரல்லரே. 4

பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலஇடர் தீர்க்கும் எம்இறை
வேதங்கள் முதல்வர்வெண் காடு மேவிய
பாதங்கள் தொழநின்ற பரம ரல்லரே. 5

மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்மிறை
விண்ணமர் பொழில்கொள்வெண் காடு மேவிய
அண்ணலை அடிதொழ அல்ல லில்லையே. 6

நயந்தவர்க் கருள்பல நல்கி இந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடு மேவிய
பயந்தரு மழுவுடைப் பரம ரல்லரே. 7

மலையுடன் எடுத்தவல் லரக்கன் நீள்முடி
தலையுடன் நெரித்தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த அடிக ளல்லரே. 8

ஏடவிழ் நறுமலர் அயனும் மாலுமாய்த்
தேடவுந் தெரிந்தவர் தேர கிற்கிலார்
வேடம துடையவெண் காடு மேவிய
ஆடலை அமர்ந்தஎம் அடிக ளல்லரே. 9

போதியர் பிண்டியர் பொருத்த மில்லிகள்
நீதிகள் சொல்லியும் நினைய கிற்கிலார்
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை அடிதொழ அல்ல லில்லையே. 10

நல்லவர் புகலியுள் ஞானசம் பந்தன்
செல்வன்எஞ் சிவனுறை திருவெண் காட்டின்மேற்
சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோ டருவினை அறுத லாணையே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

### 1. திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணில் நின்ற மணிஒக்கும்
பெண்காட் டிப்பிறைச் சென்னிவைத் தான்திரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே. 1



சுவாமிசந்நிதி மண்டபம்

கொள்ளி வெந்தழல் வீசிநின் ருடுவார்
ஒள்ளி யகணஞ் சூழுமை பங்கனர்
வெள்ளி யன்கரி யன்பசு வேறிய
தெள்ளி யன்திரு வெண்கா டடைநெஞ்சே. 2

ஊனேக் குமின்பம் வேண்டி யுழலாதே
வானேக் கும்வழி யாவது நின்மினே
தானேக் குந்தன் னடியவர் நாவினில்
தேனேக் குந்திரு வெண்கா டடைநெஞ்சே. 3

பருவெண் கோட்டுப்பைங் கண்மத வேழத்தின்
உருவங் காட்டிநின் ருனுமை யஞ்சவே
பெருவெண் காட்டிறை வன்னுறை யும்மிடம்
திருவெண் காடடைந் துய்ம்மட நெஞ்சமே. 4

பற்ற வன்கங்கை பாம்பு மதியுடன்
உற்ற வன்சடை யானுயர் ஞானங்கள்
கற்ற வன்கய வர்புர மோரம்பால்
செற்ற வன்திரு வெண்கா டடைநெஞ்சே. 5

கூடி னுனுமை யாளொரு பாகமாம்
வேட னுய்விச யற்கருள் செய்தவன்
சேட னுர்சிவ் னுர்சிந்தை மேயவெண்
காட னுரடி யேஅடை நெஞ்சமே. 6

தரித்த வன்கங்கை பாம்பு மதியுடன்
புரித்த புன்சடை யான்கய வர்புரம்
எரித்த வன்மறை நான்கினே டாறங்கம்
விரித்த வன்உறை வெண்கா டடைநெஞ்சே. 7

பட்டம் இண்டை அவைகொடு பத்தர்கள்
சிட்ட னுதியென் றுசிந்தை செய்யவே
நட்ட மூர்த்திஞா னச்சுட ராய்நின்ற
அட்ட மூர்த்திதன் வெண்கா டடைநெஞ்சே. 8

ஏன வேடத்தீ னுனும் பிரமனும்
தான வேடமுன் தாழ்ந்தறி கின்றிலா
ஞான வேடன் விசயற் கருள்செயுங்
கான வேடன்றன் வெண்கா டடைநெஞ்சே. 9

பாலை யாடுவர் பன்மறை யோதுவர்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவ ரங்கமே. 10

இராவ ணஞ்செய மாமதி பற்றவை
இராவ ணம்முடைய யான்றனை யுள்குமின்
இராவ ணன்றனை யூன்றி யருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே. 11

திருச்சிற்றம்பலம்.

## 2. திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறி அரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 1

பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
ஒத்துலக மெல்லா மொடுங் கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 2

நென்னலைஓர் ஓடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்குகின்றார்

நுங்கிலைமை யாதோ நும் மூர்தான் ஏதோ
என்றேனுக் கொன்ருகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்த ஞரே. 3

ஆகத் துமையடக்கி யாறு சூடி
ஐவா யரவசைத்தங் கானே றேறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்
புலித்தோ லுடையாப் புகுந்து நின்ருர்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
பரிசழித்தென் வளைகவர்ந்தார் பாவி யேனை
மேக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
வெண்காடு மேவிய விகிர்த ஞரே. 4

கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
உழிதருவர் நான்தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ள விழிவிழிப்பர் காணுக் கண்ணுற்
கண்ணுளார் போலே கரந்து நிற்பர்
வெள்ளச் சடை முடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த ஞரே. 5

தொட்டிலங்கு சூலத்தர் மழுவா ளேந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பா ரொக்கின் ருராற்
கட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வளைகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த ஞரே. 6

பெண்பா லொருபாகம் பேணு வாழ்க்கைக்
கோள்நாகம் பூண்பனவும் நாணுஞ் சொல்லார்
உண்பார் உறங்குவார் ஒவ்வா நங்காய்
உண்பதுவும் நஞ்சன்றே லோபி யுண்ணுர்

பண்பால் அவிர்சடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றூர்
விண்பால் மதிசூடி வேத மோதி
வெண்காடு மேவிய விகிர்த னூரே. 7

மருதங்க ளாமொழிவர் மங்கை யோடு
வானவரும் மாலயனுங் கூடித் தங்கள்
சுருதங்க ளால்துதித்துத் தூநீ ராட்டித்
தோத்திரங்கள் பலசொல்லித் தூபங் காட்டிக்
கருதுங்கொல் எம்பெருமான் செய்குற் றேவல்
என்பார்க்கு வேண்டும் வரங்கொ டுத்து
விகிர்தங்க ளாநடப்பர் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னூரே. 8

புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்துங்
காணூர் பொறியழலாய் நின்றான் தன்னை
உள்ளானை யொன்றலா உருவி னானை
உலகுக் கொருவிளக்காய் நின்றான் தன்னைக்
கள்ளேந்து கொன்றைதூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொ டுப்பார்
வெண்காடு மேவிய விகிர்த னூரே. 9

மாக்குன் றெடுத்தோன்தன் மைந்த னாகி
மாவேழம் வில்லா மதித்தான் தன்னை
நோக்குந் துணைத்தேவ ரெல்லாம் நிற்க
நொடிவரையில் நோவ விழித்தான் தன்னைக்
காக்குங் கடலிலங்கைக் கோமான் தன்னைக்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி
வீக்கந் தவிர்த்த விரலார் போலும்
வெண்காடு மேவிய விகிர்தனூரே. 10

திருச்சிற்றம்பலம்.

## பொது-க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதிகுடி விசய மங்கை வியலூர்
ஆழி அகத்தியான் பள்ளி யண்ணு
மலையாலங் காடும் அரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே.

திருச்சிற்றம்பலம்.

## பொது-அடைவு திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

மலையார்தம் மகளொடுமா தேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில்சூழ் தலைச்சங் காடு
தலையாலங் காடுதடங் கடல்சூ ழந்தண்
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக் காடு
பலர்பாடும் பழையனூ ராலங் காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விலையாடும் வளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேறு மன்றே.

திருச்சிற்றம்பலம்.

## பொது-பலவகைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

தண்காட்டாச் சந்தனமும் தவள நீறுந்
தழையணுகுங் குறுங்கொன்றை மாலை சூடிக்
கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
கார்மயிலஞ் சாயலார் கலந்து காண

எண்காட்டாக் காடங் கிடமா நின்று
எரிவீசி யிரவாடும் இறைவர் மேய
வெண்காடே வெண்காடே என்பீராகில்
வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே.
திருச்சிற்றம்பலம்.

## திருமுதுகுன்றம்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

புகழொளியைப் புரமெரித்த புனிதன் றன்னைப்
பொன் பொதிந்த மேனியனைப் புராணன் றன்னை
விழவொலியும் விண்ணொலியு மானான் றன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் றன்னைக்
கழலொலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக்
கடைதோறும் இடுபிச்சைக் கென்று செல்லுந்
திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.
திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

*பண்—இந்தளம்*

திருச்சிற்றம்பலம்.

படங்கொள்நாகஞ் சென்னிசேர்த்திப்
பாய்புலித்தோ லரையில்வீக்கி
அடங்கலாரூர் எரியச்சீறி
அன்றுமூவர்க் கருள்புரிந்தீர்
மடங்கலானைச் செற்றுகந்தீர்
மனைகள்தோறுந் தலைகையேந்தி
விடங்கராகித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே.

இழித்துகந்தீர் முன்னைவேடம்
இமையவர்க்கும் உரைகள்பேணா
தொழித்துகந்தீர் நீர்முன்கொண்ட
உயர்தவத்தை அமரர்வேண்ட

அழிக்கவந்த காமவேளை
அவனுடைய தாதைகாண
விழித்துகந்த வெற்றியென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 2

படைகளேந்திப் பாரிடமும்
பாதம்போற்ற மாதுநீரும்
உடையோர்கோவ ணத்தராகி
உண்மைசொல்லீர் உம்மையன்றே
சடைகள்தாழக் கரணமிட்டுத்
தன்மைபேசி யில்பலிக்கு
விடையதேறித் திரிவிதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 3

பண்ணுளீராய்ப் பாட்டுமானீர்
பத்தர்சித்தம் பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க் கருத்திலும்மைக்
கருதுவார்கள் காணும்வண்ணம்
மண்ணுளீராய் மதியம்வைத்தீர்
வானநாடர் மருவியேத்த
விண்ணுளீராய் நிற்பதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 4

குடமெடுத்து நீரும்பூவுங்
கொண்டுதொண்டர் ஏவல்செய்ய
நடமெடுத்தொன் றாடிப்பாடி
நல்குவீர்நீர் புல்குவண்ணம்
வடமெடுத்த கொங்கைமாதோர்
பாகமாக வார்கடல்வாய்
விடமிடற்றில் வைத்ததென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 5

மாறுபட்ட வனத்தகத்தின்
மருவவந்த வன்களிற்றைப்
பீறியிட்ட மாகப்போர்த்தீர்
பெய்பலிக்கென் றில்லந்தோறும்

கூறுபட்ட கொடியுநீருங்
குலாவியேற்றை அடரவேறி
வேறுபட்டுத் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 6

காதலாலே கருதுந்தொண்டர்
காரணத்த ராகிநின்றே
பூதம்பாடப் புரிந்துநட்டம்
புவனியேத்த ஆடவல்லீர்
நீதியாக ஏழிலோசை
நித்தராகிச் சித்தர்சூழ
வேதமோதித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 7

குரவுகொன்றை மதியமத்தங்
கொங்கைமாதர் கங்கைநாகம்
விரவுகின்ற சடையுடையீர்
விருத்தரானீர் கருத்திலும்மைப்
பரவுமென்மேற் பழிகள்போக்கீர்
பாகமாய மங்கையஞ்சி
வெருவவேழஞ் செற்றதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 8

மாடங்காட்டுங் கச்சியுள்ளீர்
நிச்சயத்தால் நினைப்புளார்பாற்
பாடுங்காட்டி லாடலுள்ளீர்
பரவும்வண்ணம் எங்ஙனேதான்
நாடுங்காட்டில் அயனுமாலும்
நணுகாவண்ணம் அனலுமாய
வேடங்காட்டித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 9

விரித்தவேதம் ஓதவல்லார்
வேலைசூழ்வெண் காடுமேய
விருத்தனாய வேதன்றன்னை
விரிபொழிற்றிரு நாவலூரன்

அருத்தியாலா ரூரன்றொண்டன்
அடியன்கேட்ட மாலைபத்துந்
தெரித்தவண்ண மொழியவல்லார்
செம்மையாளர் வானுளாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

### *திருவாசகம்—கீர்த்தித்திருஅகவல்*

திருச்சிற்றம்பலம்.

விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்.

### திருக்கோவையார்

**வேலன்** புகுந்து வெறியா டுகவெண் மறியறுக்க
**காலன்** புகுந்த வியக்கழல் வைத்தெழில் தில்லைநின்ற
**மேலன்** புகுந்தென்க ணின்றா னிருந்தவெண் காடனைய
**பாலன்** புகுந்திப் பரிசினில் நிற்பித்த பண்பினுக்கே.

திருச்சிற்றம்பலம்.

## கபிலதேவ நாயனார்

### *சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை*

திருச்சிற்றம்பலம்.

இயலிசை நாடக மாயெழு வேலைக ளாய்வழுவாப்
புயலியல் விண்ணொடு மண்முழு தாய்ப்பொழு தாகிநின்ற
மயிலியன் மாமறைக் காடர்வெண் காடர்வண் தில்லைமல்கு
கயலியல் கண்ணிபங் காரன்பர் சித்தத் தடங்குவரே.

திருச்சிற்றம்பலம்.

### *சிவபெருமான்—திருவந்தாதி*

திருச்சிற்றம்பலம்.

இன்றியாம் உற்ற இடரும் இருந்துயரும்
இன்றியாந் தீர்தும் எழில்நெஞ்சே—இன்றியாங்
காட்டாநஞ் சேற்றான் காமருவெண் காட்டான்
காட்டான்அஞ் சேற்றான் கலந்து.

திருச்சிற்றம்பலம்.

### பரணதேவ நாயனுர்

*சிவபெருமான் திருவந்தாதி*

திருச்சிற்றம்பலம்.

புகலூர் உடையாய் பொறியரவம் பூணி
புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே—புகலூராய்
வெண்காடா வேலை விடமுண்டாய் வெள்ளேற்ருய்
வெண்காடா என்பேனே நான்.

திருச்சிற்றம்பலம்.

### பட்டினத்தார்

*திருவிடைமருதூர் மும்மணிக்கோவை*

திருச்சிற்றம்பலம்.

கரத்தினில் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதஅப் பாமதி யொன்று மில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையு ளாகிவெண் காடனென்னும்
தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே.

திருச்சிற்றம்பலம்.

*திருவேகம்பமுடையார் திருவந்தாதி*

திருச்சிற்றம்பலம்.

நினைவார்க் கருளும் பிரான்திருச் சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புறம்பயம் பூவணம்நீர்
புனைவார் பொழில்திரு வெண்காடு பாச்சில் அதிகைஎன்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி ஏகம்பம் நண்ணுமினே.

திருச்சிற்றம்பலம்.

### சேக்கிழார் சுவாமிகள்

*திருத்தொண்டர் புராணம்—சம்பந்தர் புராணம்*

பொன்னிதழ்க் கொன்றை வன்னி
புனலிள மதியம் நீடு
சென்னியர் திருவெண் காட்டுத்
திருத்தொண்டர் எதிரே சென்றங்(கு)
இன்னதன் மையர்க ளானுர்
எனவொண்ணு மகிழ்ச்சி பொங்க

மன்னுசீர்ச் சண்பை யாளும்
　　மன்னரைக் கொண்டு புக்கார்.
முத்தமிழ் விரகர் தாமும்
　　முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ டுவகை யோடுஞ்
　　சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தராம் அடியார் சூழப்
　　பரமர்கோ யிலைச்சூழ் வந்து
நித்தனுர் தம்முன் பெய்தி
　　நிலமுறத் தொழுது வீழ்ந்தார்.

மெய்ப்பொரு ளாயி னுரை
　　வெண்காடு மேவினுரைச்
செப்பரும் பதிக மாலை
　　கண்காட்டு நுதல்முன் சேர்த்தி
முப்புரஞ் செற்ருர் பாதஞ்
　　சேருமுக் குளமும் பாடி
ஒப்பரு ஞான முண்டார்
　　உளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார்.

*ஏயர்கோன் கலிக்காமநாயனுர் புராணம்*

தேவர்பெரு மான்தன்னைத் திருச்சாய்க்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரமெரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலரடைந்தார் நனிபள்ளித் திருநகரில்.

சிதம்பர முனிவர்

*க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்*

தண்தரளம் எறிதிரைப் பாலாழி சததளத்
　　தாமரைச் சிங்காதனந்
தருகற்ப கக்காடு சங்கநிதி பத்மநிதி
　　தந்திடுஞ் சிந்தாமணி
எண்திசா முகமுடன் சந்த்ரசூ ரியர்பதம்
　　இந்திரபு ரோகிதர் பதம்
ஈராறு ராசிபதம் மனுமன்னர் தம்பதம்

எண்ணிலா தோர்பதங்கள்
தொண்டுசெயு மன்பருக் கென்றே படைத்தனன்
தோன்ருத்து ணேயாமிவன்
தோன்றுந் துணேயென்ன முன்னின் றழைத்தனன்
துண்ணென்ன ஓடிவந்தால்
அண்டங்கொ டுத்தருள்வ னெங்கள்கும ரேசனுடன்
அம்புலீ யாடவாவே
அவனிபுக ழஞ்சுவேத வனமுறையும் வேலனுடன்
அம்புலீ யாடவாவே.

சோமசுந்தர தேசிகர்

*சிவாலய மான்மியக் கோவை*

தொய்யின்வெம் முலேயார் மையலிற் சிக்கிச்
சூழ்நர கினுக்கிலக் காகிப்
பொய்யனேன் வருந்தல் தக்கதோ அருள்வாய்
பூம்பொழில் சூழும்வெண் காட்டு
மெய்யனே சுவேதா ரண்ணியேச் சுரனே
மிளிர்கவின் பெரியநா யகிசேர்
செய்யனே வெள்ளே யானேபூ சித்த
செல்வமே கருணேவா ரிதியே

பட்டினத்துப் பிள்ளேயார்

*திருவெண்காட்டுத் திருவிசைப்பா*

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே உரைத்துங்
கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங்
கழிந்தன கடவநா ளெல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம்வீற் றிருக்கும்
வீழாவரு வீதிவெண் காடா
அண்டரே காண அம்பலத் தாடும்
ஐயனே உய்யுமா றருளே.

கோடிய மனத்தால் வாக்கினுல் செயலால்
கொடியஐம் புலன்களால் அடியேன்
தேடிய பாவ நரகமுங் கொள்ளா
செய்வதம் புரியினுந் தீரா

வீடிய பிரமர் சிரமெலாங் கவர்ந்த
விழாவரு வீதிவெண் காடா
ஆடிய பாதா அம்பலத் தாடும்
ஐயனே உய்யுமா றருளே.

### கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்

*கந்தபுராணம்—திருவிளையாட்டுப்படலம்*

சூழுற்றவெல் லையிமையோர்க்கிறை தொல்லைநாளிற்
காழுற்றதந்தமறவேகி வெண்காட்டிலீசன்
கேழுற்றதாளர்ச்ச னைசெய்து கிடைத்துவைகும்
வேழத்தையுன்ன வதுவந்தது மேருவின்பால்.

### பரஞ்சோதி முனிவர்

*திருவிளையாடற்புராணம்—அர்ச்சனைப்படலம்*

கோடுநான் குடைய வேழந் தானவன் குறைத்த கோட்டைப்
பாடற நோற்றுப் பெற்ற பதியிது* மாலை சாத்துந்
தாடகை மானங் காப்பான் றாழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலய னன்பி னிமிர்ந்தவெம் பிரானூ ரீதால்.

### தனிப்பாடல்

ஊரெலாஞ் சிவலோகம் மணலெலாஞ் சிவலிங்கம்
உயர்மரமெலாந் தெய்வதம்
ஊர்வன பறப்பன நடப்பன கிடப்பன
வும்பரினமாங் குளம்பின்
நீரெலாஞ் சிவதீர்த்தம் நிதியெலாஞ் சங்கநிதி
நெல்லெலாம் அன்னமயமாம்
நினைவெலாஞ் சிவசிந்தை கனவெலாஞ் சிவபோகம்
நித்திரையெ லாஞ்சமாதி
காரெலாம் பொழின்மருவு காவிரியி னிருபால்
கலந்துவரு மாலையெனவே
கடலொலியி னெடுசுருதி பகரொலி கலத்தலால்
கயிலாயமெனக் கொண்ட

* பதி—திருவெண்காடு.

பேரெலாஞ் சிவகணம் எனப்பொலியும் ஆதலால்
பெரியவெண் காடரென்னப்
பிறைகொள்வார் சடையண்ண லருகின்வா ழுறைமன்னு
பெரியநாயகி யம்மையே.

### சைவ—எல்லப்ப நாவலர் திருவெண்காட்டுப் புராணம்

*சுவேதாரணியேசுரர்*

சொற்கண்டு பசுங்கிளியுங் கருங்குயிலுங் கடலமுதுஞ் சுவையருத
கற்கண்டுந் திறையளக்கு மலர்த்திருவின் பெருமானுங் கமலத்தானு
மற்கண்ட விடம்பிறந்த தலைநாளி லிறவாம லருள்செய் தானைப்
பொற்கொண்ட லனையவனைச் சுவேதவனப் பெருமானைப்
போற்றுவாமே.

பெரியநாயகியம்மை

அடையலர்தம் புரமூன்று மடர்த்தபிரான்
புவனமுய்ய வாடா நிற்பான்
பெடைதழுவுஞ் சுவேதவனம் புடைசூழுஞ்
சுவேதவனப் பெருமா னுர்தந்
தொடைதிகழு மணிப்புயமுந் திருமார்புங்
குழைத்தகொங்கைத் துணையினளை
யிடைசிறிய நாயகியை யருட்பெரிய
நாயகியை யிறைஞ்சு வாமே.

நடராசர்

துடிவரத மெரிகனலு முயலகனை
மிதிபதமுந் தூக்குந் தாளும்
படிமுழுதும் படைத்தளித்துச் சங்கரித்து
மறைத்தருளும் பான்மைத் தாக
நடநவிற்றி நவ்விவிழிச் சிவகாம
சுந்தரியை நாடி நின்ற
படவரவுங் கொடுவரியும் பழிச்சவமர்
பரம்பரனைப் பரவி வாழ்வாம்.

**தலவிநாயகர்**

கரியநா ரணனுர்க்குங் கரியநா ரணரளித்த கமலத் தார்க்கு
மரியநா யகரைவலம் புரிந்துசெழுங் கனிவாங்கி யருந்தி னனைத்

தெரியுநான் மறைமுனிவர் மகம்புரிய முழக்கமருத் திருவெண் காட்டிற்
பெரியநா யகியளித்த பெரியவா ரணத்தையன்பாற் பேசு வாமே.

முக்குளப்பெருமை

முக்குளத்திற் படிந்தவர்கள் மூவகையா
மேடணைகள் மூன்றுந் தீர்வர்
முக்குணமுங் கழன்றிடுவர் அதற்கடியா
கியபாச மூன்றுந் தீர்வர்
முக்கடமா உரிபுனைவர் முத்தலைவேல்
பிடிப்பரரா முன்னூ லாவர்
முக்கணுடை யவர்சூழ முத்தொழிலுந்
தந்தொழிலா முடிப்பர் தாமே.

அகிலபுவ னங்களெல்லா மொருகோ லோச்சி
ஆளுதற்கு நினைக்கிலந்த அரசுண் டாகும்
பகைமைதவிர்ந் திடநினைத்தாற் பகைமை தீரும்
பாலகரை வேண்டிலந்தப் படியாம் பின்னைத்
தொகைபெறலூர் விடையுண்டாம் இருதாள் உண்டாம்
சுடர்நயன மூன்றுண்டாந் தோள்நான் குண்டாம்
முகவனசம் ஐந்துண்டாம் முடியா றுண்டாம்
முக்குளத்தி லொருபோது மூழ்கு வார்க்கே.

பத்திசெய்யு மடியாரைக் கண்டால் நம்மைப்
பணிவதுபோற் பணிந்துருகும் பரிவுண் டாகும்
சித்தசுத்தி மிகவுண்டாம் நமையெப் போதும்
சிந்தித்துச் சிந்திக்கும் செல்வ முண்டாம்
சுத்தவித்தை முதல்நாத மளவா நீங்கிச்
சுவானுபூ திகமடைந்து தொலையாச் சீவன்
முத்தரெனு நிலையுண்டாம் திருவெண் காட்டின்
முக்குளத்தி லொருபோது மூழ்கு வார்க்கே.

களித்திடு முக்குளத்தை நெஞ்சால் நினைத்தபேர்
கங்கையிலே மூழ்கிவந்தோர் கதியைச் சேர்வர்
தெளித்தவர்கள் மகாபதத்தை யடைவர் இந்தச்
செழுங்கரைமே லணுவளவு செம்பொன் றானம்
அளித்தவர்கள் நமையடைவர் அளித்து மன்னு
ஆடியபே ரானந்த ஆழி யூடே
குளித்திடுவர் அவையிலொரு துளிநீ ருள்ளே
குடித்திடுவார் தாய்முலைப்பால் குடித்திடாரே.

முக்குளத்தைப் புகழ்ந்தவர்க்குத் தானபலன்
யாகபலன் முழுதுண் டாகும்
முக்குளத்தைத் தொழுதவர்க்கு முப்பொழுதுஞ்
சிவபூசை முடித்த பேறும்
முக்குளத்தை வலம்பிரிந்தால் மூவுலகை
வலம்புரிந்த முழுப்பே றுண்டாம்
முக்குளத்தின் மூழ்கினபேர்க் கொருநயனம்
நடுக்குளத்தின் முனைக்குந் தானே.

சிவானந்தர்

*ஸ்ரீ அகோரரந்தாதி*

பூவார் பொழிற்றிருவெண்காட்டில் வாழும் புனிதன் உம்பர்
ஆவார் பெருந்துன் பொழித்திடத்தோன்றும் அகோனுரக்கென்
நாவார் சொன்மாமலர் கொண்டொர் அந்தாதித்தொடை நவிற்று
மாவார் பெரும்வாரணப் பிள்ளையார் தம் மலர்ப்பதமே.

சொல்லு நினைவுங் கடந்தொளிர் சோதிச் சுகவடிவே
யல்லும் பகலுநின் னம்புயப் பாதத்தி லன்புவைத்தே
புல்லும் வணஞ்செய லுன்கட னேகடற் பொங்கிமிழை
வெல்லு மறையொலி வெண்காட்டகோரநல் வித்தகனே.

அன்பே சிவமன்றி வேறில்லை யென்ன வருமறைகண்
முன்பே மொழிந்தன வென்கட வேன்முடை மூரலர்தம்
பின்பே யலைந்தெரி மேலிழு தென்னப் பெரிதுநைந்தே
னின்பே யகோர விரங்கா யினியுனை யெண்ணிடவே.

மாணிக்க வாசக மாமறை யோனுமெவ் வானவரும்
பேணிக்கை கூப்பும் பெருநாவலூரனும் பேரொளியைத்
தோணிக்கட் சுட்டுமென் றேன்றலும் வாக்கின் றுரையுஞ்சொலும்
பாணிக் கழலி லகோரா வணியென் பருங்கவியே.

பண்ணுர் தவமொன்று மேயைந் தெழுத்தைநற் பத்தியோடு
மெண்ணு ரிகமும் பரமுந் தருமுன் னெழில்வெள்வன
நண்ணு ரகோரநின் னல்லடி யார்க்கன நல்கிமிச்சி
லுண்ணு ருடற்பொதி காப்பா ரவர்க்கென் னுரைப்பதுவெ.

நாயக னேயண்டம் யாவைக்கு நல்லிசை நான்குமறைக்
காயக னேகரு ணகர னேவின்ன கணிக்கவெழு
வேயக னேர்பொழில் சூழ்திரு வெள்வன வித்தகனே
தாயக னேயென் னகோராநி னம்பொற் சரண்சரணே.

8B
4-[illegible]
MADRAS RECORD OFFICE MADRAS
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1961
MADRAS



MADRAS RECORD OFFICE [illegible]

மெய்கண்டாரும் பொல்லாப்பிள்ளையாரும்